1001

# கோயிலும் சுனேயும்

## நாடகத் தொகுதி

தாபி. சுப்பிரமணியம்

வெளியீடு:
ஈழத்து இலக்கியச் சோலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலும் சுனையும்

நாடகத் தொகுப்பு

## தாமி. சுப்பிரமணியம்

வெளியீடு:

ஈழத்து இலக்கியச் சோலை
21, ஔவையார் வீதி,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Koyilum Sunaiyum

(SHORT DRAMAS)

Author: **THABY, SUBRAMANIAM**
92, Post Office Rd,
Trincomalee.

**First. Edition: 25th Dec. 1989.**
**Eelaththu Ilakkiyach Cholai**
**Publication: 2**
**Printed by: UTHAYAN Printers - Jaffna.**
**Prlce:**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை கலைவட்டத்தின் செயலாளரும்
இலங்கை வானொலி, ரூபவாஹினி நாடகக்கலைஞரும்
திருக்கோணமலை கோட்டக் கல்வித் திணைக்கள
நிதி உதவியாளருமான

## திரு. பீ. ரேச் அருளப்பு

அவர்களின்

# மதிப்புரை

நாடகம் எழுதுவதென்பது பலர் நினைப்பதுபோல் அத்தனை சுலபமான காரியமல்ல. மிகச்சிறந்த சிறுகதை. நாவல் ஆசிரியர்கள் எல்லாராலுமே நல்ல நாடகங்களைப் படைக்க முடிவதில்லை.

அதிலும், மேடை நாடகங்களை எழுதுவது மிகச் சிரம மானது. அதிலும் நம் இலங்கை வானொலிக்கு நாடகங்கள் எழுதுவதென்பது ஓர் இயந்திரத் தன்மைவாய்ந்தது என்று கூடச் சொல்லலாம்.

ஓர் எழுத்தாளனது எண்ணங்களை - கருத்துக்களைச் சுதந்திரமாகச் சொல்லமுடியாத - விரும்பிய சொற்களையோ, வாக்கியங்களையோ நினைத்தபடி பயன்படுத்தமுடியாத வகையில் சில குறிப்பிட்ட வரைமுறைகளுக்குட்பட்டே இந்நாட கங்கள் எழுதப்படல்வேண்டும். இன்று இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படும் நாடகங்களினின்று இதனைத் தெளிவாக விளங்கிக்கொள்ளமுடியும்.

இந்நூலாசிரியர் திரு தாபி. சுப்பிரமணியம் அவர்களை மிக நீண்டகாலமாக நான் அறிவேன்.

எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி, அமைதியாக தனது எழுத்துப்பணியைச் செய்துகொண்டிருக்கும் ஒரு ஆசிரியர் - அதிபர். தனது தொழிலுக்கும், தகமைக்கும் ஏற்றவகையில் சமுதாயத்திற்கும் மாணவர்களுக்கும் நன்மை தரக் கூடிய படைப்புக்களையே தந்துகொண்டிருக்கும் ஒரு நல்ல ஆசான் - ஒரு நல்ல நிர்வாகி என்று கூறினல் அது மிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகாது. நீண்டகால எழுத்துத்துறை அனுபவம் கொண்டவர் பல வெளியீடுகள் இவரது படைப்பாக வெளிவந்துள்ளன.

திருக்கோணமலை நகராட்சி மன்றத்தின் உபதலைவராக வும் இருந்த இவர், தற்போது புனித வளனார் வித்தியாலய அதிபராகவும், திருமலை கிழக்குக் கொத்தணி பிரதி அதிப ராகவும் சேவை புரிகிறார்.

பல பொறுப்புகளுக்கு மத்தியிலும் நாடகத் துறைக் கென இத்தொகுதியை அவர் சமர்ப்பிப்பது குறித்து நாம் அனைவரும் பெருமைப்படல்வேண்டும்.

இவரிடமிருந்து மேலும் பல இலக்கிய ஆக்கங்கள் உருவாக எதிர்பார்க்கிறோம்.

வாழ்க கலை!

**பி. ரேச் அருளப்பு.**

கோட்டக் கல்வித் திணைக்களம்,
திருக்கோணமலை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டாளர் உரை

திருக்கோணமலையின் பிரபல எழுத்தாளர் பலரின் சிறுகதைகள்கொண்ட 'ஒற்றைப்பனை' சிறுகதைத் தொகுதியை நாம் எமது முதல் வெளியீடாகத் தந்ததும், அதனை வாசக நேயர்கள் அன்புடன் ஆதரித்ததும் முன்னைய அனுபவங்கள்.

மிக நீண்ட காலத்திற்குப் பின் இரண்டாவது வெளியீடாக 'கோயிலும் சுனையும்' என்ற இந்த நாடகத் தொகுதியை வெளியிட்டு உங்கள் கைகளில் தருவதில் நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

சகல வரலாற்றுக்கும், திருக்கோணமலைக்கும் பல் வேறு நெருங்கிய தொடர்பு உண்டு என்பதோடு, 'முதன்மை ஸ்தானமும்' உண்டு என்பதை பலர் அறிய சந்தர்ப்பச் சூழ்நிலைகள் சாதகமாயில்லை என்பதை நாம் உணர்வோம்.

குறிப்பாக, திருகோணமலை நாடக வரலாற்றை நோக்கும்போது 1930 இல் இன்னாசிமுத்து என்பவர் எழுதிய 'ஊசோன் பாலந்தை' என்ற நாடகமே முதன்முதலில் திருக்கோணமலையில் மேடை ஏறியதோடு, அச்சுப்பிரதியாகவும் வெளிவந்துள்ளதை நாம் அறியமுடிகிறது. அதேவேளையில்... அதற்கு முன் 1880 இல் கண்டிராஜன் நாடகத்தை திருக்கோணமலை அகிலேஸ் என்பவர் எழுதியுள்ளார் என்ற விபரம் அண்மையில் வாசிக்கப்பட்டு மனமகிழ்ந்தவர்களில் நாமும் ஒருவர்.

ஆனால், 1925 இல் வேலாயுதபிள்ளை என்பவர் சேக்ஸ்பியரின் 'மெஸர் போ மெசர்' (Measurer for Measure) என்ற நாடகத்தை தமிழில் கவிதை நாடகமாக்கி 'இஸபெல் அல்லது ஈஸ்வரி, என்ற பெயரில் இங்கிலாந்திலிருந்த பரமேஸ்வரி பிரிண்டிங் வேர்க்ஸ் ஸ்தாபனத்தில் அச்சடித்து அங்கேயே விற்பனைக்கு விட்டிருந்தார். இந்நூல் இவரது தந்தையாரான சரவணமுத்து விஸ்வநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்டது.

இதன் பின் பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ள போதும் அச்சில் வந்துள்ளதாக நாம் அறியோம்.

இந்த நாடக நூலான 'கோயிலும் சுனையும்' ஆசிரியர் திருக்கோணமலை புனித வளனர் வித்தியாலய அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. தாபி சுப்பிரமணியம் அவர்கள் எனது நீண்ட நாளைய இனிய நண்பர். 1953, 54இல் நான் பாடசாலை மாணவ னாக இருந்த காலையில் 'யாழ்' என்ற சிறுவர் இலக்கிய கையெழுத்துப் பிரதியை வெளியிட்டிருந்தேன். அதே கால கட்டத்தில் 'தாபி' அவர்களும் 'அறிவுச்சுடர்' என்ற சிறு வர் இலக்கிய கையெழுத்துப் பிரதியை நடாத்தி வந்தார். இதன் மூலம் இவரது அறிமுகம் உருவாகியது.

பாடசாலையில் சாரண இயக்கம் வலுப்பெற்றிருந்த அந்தக் காலகட்டத்தில் சாரண இயக்கங்களுக்கிடையே ஏற் படும் சந்திப்பின் தொடர்பும் எமது அறிமுகத்தை மேலும் விரிவாக்கியது. வலுப்பெறச் செய்தது.

'Bell' என்ற நாடகத்தின் மூலம் தனது நாடக ஆற்றலை வெளிக்காட்டிய சிறந்த கலைஞனும், நாடக யுக்தி களை இயல்பாக நிரம்பப் பெற்றவரும், அப்போது பிறப்புக் கந்தோரில் இலிகிதராகக் கடமையாற்றியவரும், தற்போது ஜேர்மனியில் தொலைக்காட்சி நிறுவனமொன்றில் பிரதம தயாரிப்பாளராக இருப்பவருமான திரு. ஜே. கருணை யோசப் என்பவரின் முயற்சியால் 1958 இல் 'கலைவாணி நாடக மன்றம்' ஒன்றை நாம் ஆரம்பித்தபோது அதன் செயலாளராக தாபி பொறுப்பேற்றிருந்தார். முதலாவது அங்குரார்ப்பண நிகழ்ச்சியின்போது அரங்கேற்றப்பட்ட திரு. ஜோனின் நாடகமான பழிக்குப்பழி என்ற நாடகத் தில் இருவரும் நடித்தது ஒரு புதிய அனுபவமாகும். சில மாதங்களின் பின் இந்நாடகம் வானொலியில் தொழிலாளர் நிகழ்ச்சியில் நடிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டமை குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

மேற்படி கலைவாணி நாடக மன்றத்தின் பத்தாண்டு நிறைவையொட்டி 1968 இல் பிரமாண்டமான முறையில் கலையமுதம் என்னும் பல்சுவை நிகழ்ச்சியைத் தயாரித்து வெற்றிகரமாக மேடையேற்ற உதவியவர்களில் தாபியும் ஒருவராவர்.

அப்போதிருந்த எமது நாடக மன்றத்தின் புகழ் காரணமாக எமக்கு வரும் திடீர் அழைப்புகளின் போது, ஏற்படும் நடிகர் பஞ்சத்தில் திடீர் என மேடையில் தோன்றி சமயோசிதமாக நடித்து நிகழ்ச்சியைப் பூரணப்படுத்துவ தோடு, ரசிகர்களையும் திருப்திப்படுத்தும் இயல்பு கொண்ட வர் தாபி.

அன்றிலிருந்து இன்றுவரை நாடகமன்றத்தின் வளர்ச் சிக்காக அயராது உழைத்ததன் பெறுபேறாக நாடகத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் மிக நீண்ட அனுபவத்தைப் பெற்றுக்கொண்டவர் தாபி. இந்த நாடக மன்றத்தின் வாயிலாக எமது நட்பு நெருக்கம் கண்டது.

இந்த நாடகத் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'கோயிலும் சுனையும்' என்ற நாடகம் குங்குமம் என்ற இதழின் திருக்கோணமலை விசேட மலரில் பிரசுரமாகியிருந்ததோடு 09 - 08 - 1972இல் இலங்கை வானொலியில் ஒலி பரப்பப்பட்டதுமாகும்.

இவரது ஆற்றல் அளப்பரியது. சிறுகதை, நாவல், கவிதை என்பவற்றை நிறைய எழுதியுள்ளார். சிறந்த ஓவியர். வீரகேசரிப் பிரசுரமாக இவரது நாவல் ஒன்று வெளிவந்துள்ளது. 'ஸ்ரென்ஸிலில்' சித்திரம் வரைவதில் வல்லுனர் என்றே சொல்லவேண்டும். கல்வித் திணைக்கள ஆரம்ப ஆசிரியர்களுக்கான சித்திர வழிகாட்டி செயல் ஆசிரியராகவும் இவர் கடமைபுரிகிறார். திருக்கோணமலை நகராட்சி மன்றத்தின் உறுப்பினராகவும், உபதலைவராகவும் சேவைபுரிந்தவர். திருக்கோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குனர்களில் ஒருவராகவும் சேவையாற்றியுள்ளார்.

சமூகத் தொடர்புகள் ஏராளம் இருந்தபோதும், மனம் குன்றாமல், இளமைத் துடிப்போடும், இனிய நினைவோடும், சிரிப்பை ஊட்டிச் சிந்திக்கவைக்கும் சிலேடை பேச்சுக்களோடும், கலகலப்பாகப் பழகும் இனிய சுபாவம் கொண்டவர் தாபி.

இத்தகைய சுபாவம் கொண்ட தாபி அவர்களிடமிருந்து நாடக உலகிற்கு இவ்வாறான தொகுதி கிடைப்பது குறித்து அனைவரும் மகிழ்ச்சி அடைவர் என்பது திண்ணம்.

கலையுலகம் இதனைப் பெரிதும் வரவேற்கும் என்ற திட நம்பிக்கையோடு.... இன்னும் பல வெளியீடுகளைத் தரவேண்டும் என்று சிந்தித்துள்ளோம்.

'ஈழத்து இலக்கியச் சோலை'
21, ஔவையார் வீதி,
திருக்கோணமலை.
25 - 12 - 89

த. அமரசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில நிமிடங்கள்.....

மிக நீண்ட காலமாக என்னுள் கனத்த ஒரு எண்ணத்தின் அச்சு வடிவமே இத்தொகுதி.

ஆக்க இலக்கியங்களிற்கு நான் பழைமையான வன் என்ற போதும், நாடகத்துறைக்கு அச்சு வடிவில் ''கோயிலும் சுனையும்'' தொகுதி முதலாவதாகும்.

இதனைத் தனது இரண்டாவது வெளியீடாகத் தொகுக்க முன் வந்த ஈழத்து இலக்கியச் சோலை நிறுவனத்தார்க்கு என் பாராட்டுக்கள்.

இதனை மிகக் குறுகிய காலத்தில் அழகாக அச்சில் வெளிவர ஆவன செய்த நண்பர்கள் திரு. வே. வரதசுந்தரம், திரு. ந. வித்தியாதரன் ஆகியோருக்கும் அதற்குத் துணையாகவும். தூண்டுகோலாகவும் நின்ற திரு. ந. செல்வஜோதி அவர்களுக்கும் எனது நன்றிகள்.

அன்போடு அணிந்துரை வழங்கிய அன்பர் திரு. பி. ஸ்ரேச் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

வெளிவந்த எனது முன்னைய படைப்புகளைப் போல் — இதனையும் கலையுலகம் ஆதரித்து வரவேற்கும் என எதிர்பார்க்கின்றேன்.

**தாபி - சுப்பிரமணியம்**

92, தபாற்கந்தோர் வீதி,
திருக்கோணமலை.
25.12.1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணத்தையல்ல.....

—(மாலை நேரம், மழை தூறிக்கொண்டிருக்கிறது: வீதியின் நடுப்பக்கத்தால் பீற்றர் ஓடி வந்து, ஒரு வீட்டின் ஓரத்தில் ஒதுங்குகிறான்)—

பீற்றர்: 'சீ! என்ன இந்த மழை இப்ப புடிச்சுக் கொண்டுது... கொஞ்சம் விட்டிருந்தது எண்டு வெளிக்கிட்டா... திரும்ப புடிச்சுக் கொண்டதே சனியன்...... ஒண்டில் பெய்யிறதெண்டா பெய்யணும்...... இல்லாட்டி விடோணும்... தரித்திரம் புடிச்சது'...(கையால உடம்பை நீவி விட்டுக் கொண்டே கையிலிருந்த மணிக்கட்டைக் கழட்டி காற்சட்டைப் பொக்கற்றுக்குள் போடுகிறான்;)'

பீற்றர்: (சபையைப் பார்த்து) 'நீங்க பயந்துபோய் ஒதுங்கி நிற்கிறன் எண்டு நினைக்கக்கூடாது: அறுபத்திஞலுல புயல் அடிக்கத் தொடங்கேக்க கூட சும்மா நடந்து திரிஞ்சவன் நான்; இப்பவும் என்ன சும்மா விசுக்கி நடந்திடுவன்... ஆனு... என்ர கையில இருக்கிற இந்த சொப்பிங் பை மட்டும் இல்லையெண்டா......'

(அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு)

'இவன் அமரசிங்கத்தின்ர கடைக்க புகுந்தாலும் கொஞ்ச நேரம் அரட்டிக் கொண்டிருக்கலாம்;
ஆனு... அவன்ர கடையும் பூட்டிக் கிடக்கு...'
'சரி இதுலயே கொஞ்ச நேரம் சமாளிப்போம்...'

சந்திரன்: (குடையை மடக்கிக் கொண்டு பீற்றருக்குப் பக்கத்தில் வந்து நிற்கிறான்.)

ஆர்... பீற்றரா? இதெங்க இந்தப்பக்கம்......?'

பீற்றர்: 'சந்திரனு...! வா மச்சான்... வரப்பிரகாசம் கடைக்குப் போக எண்டு வந்தனுன்... வழில நாசமாப் போன மழை வந்து கெடுத்திட்டுது... அதான்... இப்பிடி ஒதுங்கி நிற்கிறன்.

அதுசரி...... நீ எங்க இங்கால...?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன்: அதுதான்... இந்த மழை... எப்பிடிப் போறது...?'

பீற்றர்: 'இது நல்ல கதை... கையில குடைய வச்சுக் கொண்டு...?

சந்திரன்: ஓமோம்... இதுக்குப் பேர் குடைதான்... இந்த நாளயக் குடைகளைத் தெரியாதே? சும்மா ஒரு பெஷனுக்கு ஆட்டிப் புடிச்சுக் கொண்டு போகலாமே தவிர ஒரு ஆத்திரம் அவசரத்துக்குப் புடிக்கலாம் எண்டு நினைக்கிறியே? சடக் படக் எண்டு கம்பிகள் மடங்கி முழுத்தண்ணியும் தலையில ஊத்திட்டுது தெரியுமா?

பீற்றர்: 'இதுக்குத்தான் நான் குடையே வச்சிக்கிறதில்லை...'

சந்திரன்: 'அது கிடக்கட்டும்... விடிஞ்சா கிறிஸ்மஸ். வீட்ட வரலாமோ...?

பீற்றர்: 'இது ஒரு கேள்வியா...? தாராளமா வா. வீட்டுல எவ்வளவு வேலை கிடக்கு...
இந்த மழை இங்க என்ன மினக்கெடுத்துது... இந்த சொப்பிங் பை கையில இல்லண்டா விட்டுறுவன் நடையில...'

சந்திரன்: 'அப்பிடி என்ன பெரிய சாமான் அதுல கிடக்கு...

பீற்றர்: 'இவன் எண்ட மகனுக்கு ஒரு ரீ சேர்ட் வாங்கினனுன்... ஆனா...' இப்ப திருப்பிக்குடுக்கக் கொண்டு போறன்.'

சந்திரன்: 'ஏன் அளவு சரியில்லையா?'

பீற்றர்: 'சீ...!... அளவெல்லாம் சரியாத்தான் இருக்கு.'

சந்திரன்: 'அப்ப நீ சும்மா பிளேன் கலரில எடுத்திருப்பாய்... அதுதான் வேணும் என்றுனுக்கும். இந்த நாளயப் பொடியளத் தெரியாதாக்கும்... அவனுகளுக்கு நல்ல டார்க் கலரில பெரிய பெரிய எழுத்துக்கள் போட்ட ரீ சேர்ட் தான் புடிக்கும் எண்டு உனக்குத் தெரியாதா'

பீற்றர்: 'பையிலிருந்து சேர்ட்டை வெளியில் எடுத்துக் காட்டுகிறான்
இதப்பார்...... இதப்பார்......'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன்: 'சா...என்ன வடிவா இருக்கு... உன்ர மகன்ர கலருக்கு நல்லா மட்ச் ஆகும்...'

பீற்றர்: 'அப்பிடிச் சொல்...... நான் எவ்வளவு நேரம் தேடி இந்த கலர் ரீ சேர்ட்டை தெரிஞ்சு எடுத்தனான் தெரியுமா?'

சந்திரன்: 'அப்பிடியெண்டா, ஏன் உன்ர மகன் இதை வேணும் எண்டு சொல்ருன்......?'

பீற்றர்: 'அதுதான் எனக்கும் தெரியல்ல......? அவன் சொல்ருன்... லைட் கலர்ல பிளேனு இருந்தாத்தான்...... தான் போடுவன் எண்டிட்டான். எனக்கு அப்போது வந்த ஆத்திரத்தில் அவனை அந்த இடத்திலேயே தூக்கிக் குத்தத்தான் எண்ணம் வந்தது.'

சந்திரன்: 'அதுல பிழையில்லை... ஆனு... அவன் நல்லாத்தானே கேட்டிருக்கான்... நல்லநாள் அதில... லைட் கலர் அது நல்லம்தானே......'

பீற்றர்: 'ஓ......! அதுதான் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு வெளிக்கிட்டு வந்தனான். இதக் குடுத்து மாத்திட்டு வரலாமெண்டா... இந்த மழைச்சனியன் இடையில வந்து நிப்பாட்டிப் போட்டுது......'

சந்திரன்: (கையை நீட்டிப் பார்த்து விட்டு) 'இந்தா மழை குறையுமாப் போல கிடக்குது... இன்னும் கொஞ்சம் குறையட்டும்... சரி அத விடு... நாளைக்கு வீட்டுல பார்ட்டி கீட்டி......'

பீற்றர்: 'அதெல்லாம் ஒண்டுமில்லை... சும்மா பலகாரம் கேக் அதெல்லாம் செய்திருக்கிருங்க. ஆனு...... எங்கட ஒபிஸ் பிரண்ட்ஸ் எல்லாரும் நாளைக்கு வாறனெண்டவனுகள்......'

சந்திரன்: 'உங்கட ஒபிஸ் பிரண்ஸ்ஸோ...... அவங்களுக்கு உன்ர கேக்கைக் கொடுத்து சமாளிக்க ஏலும் எண்டு நினைக்கிறியா.....?

பீற்றர்: 'அதெண்டா மெய்தான்... அவங்களெல்லாம் சாதாரண ஆக்கள் இல்ல... பெருங்குடி மன்னர்கள்... கேக் கீக்கெல்லாம் அவங்களுக்குச் சரி வராது... எண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தெரியும்... நேற்று எதிர்பாராமல் ஒரு ஓவர் ரைம் காசு கிடைச்சது. நூறு ரூபா. அது இப்ப (பின் பொக்கற்றைத் தட்டிக்காட்டி) இங்க இருக்கு... இந்த ரீ சேட்ட மாத்திட்டு வரப்பிரகாசம் கடையால வரக்குள்ள அப்பிடியே கிங்ஸ் ஹவுஸில் ஒரு போத்தலை வாங்கிக் கொண்டால்... அது நாளைக்குப் போதும். அதவச்சி அவங் கள சும்மா சமாளிக்கலாம்......'

சந்திரன்: 'ஓமோம்... நல்லநாள் பெருநாள்ல போத் தல் எடுக்கல்ல எண்டா அது நமக்கு மரியாதையாக இருக்காது......'

குரல்: .........'அருள் நிறைந்த மரியாயே வாழ்க...... கர்த்தர் உம்முடனே. பெண்களுக்குளளே ஆசீர்வதிக்கப் பட்டவள் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய யேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவராமே......' (பீற்றரும் சந் திரனும் தங்கள் கதைகளை நிறுத்திக் கொண்டு குரல் வந்த பக்கம் கவனத்தைச் செலுத்துகின்றனர் ஒதுங்கி யிருந்த வீட்டுத் தட்டிக்குள்ளால் நோட்டம் விடுகின்ற னர்)

சந்திரன்: (மெதுவாக) 'பீற்றர் இதுவும் வேதக் காரர்ர வீடு போலிருக்கு... உள்ளுக்குள்ள செபமாலை சொல்லிக்கொண்டிருக்கிறுர்கள்...'

பீற்றர்: 'சீ இவங்க வேதக்காரராய் இருக்க முடியாது. ஏனென்டா நாளைக்கு கிறிஸ்மஸ்... வீடு ஒண்டும் வெள்ளையடிக்கல்ல, சோடினை ஒண்டும் போடல்ல, ஜன் னல்களுக்கு புது கேர்ட்டின் ஒண்டும் போடல்ல......' (அறையின் உள்... ஒரு சிறுவன் கண்ணீரோடு செபித்துக் கொண்டிருக்கிறுன். அவனுடைய தாயாரும் பக்கத்தில் பைபிளோடு முழங்காலில் இருக்கிறுள்.)

தாய்: 'மகனே...... செபமாலை முடிந்தது. இந்த பைபிளை எடு' (மகன் பைபிளைத் தாயிடமிருந்து வாங்கு கிறுன்.)

தாய்: 'அர்ச்சிட்ட லூக்காஸ் எழுதிய நற்செய்தியில் இரண்டாம் அதிகாரத்தை எடுத்து ஏழாம் வசனத்தி லிருந்து பன்னிரண்டாம் வசனம் வரை வாசி மகனே...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன்: ('பைபிளைத் திறந்து பக்கங்களைப் புரட்டி வாசிக்கிறுன்)

அவள் தலைப்பேறுன மகனை ஈன்றெடுத்து துணிகளில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தினுள். ஏனெனில் சத்திரத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை, அதேவேளையில் அதேபகுதியில்... சில இடையர்கள் வெட்டவெளியில் தங்கி இரவெல்லாம் தங்கள் கிடைகளுக்குச் சாமக் காவல் காத்துக்கொண்டிருந்தனர். ஆண்டவருடைய தூதர் அவர்களுக்குத் தோன்றினுர். விண்ணெளி அவர்களைச் சூழ்ந்து சுடர்ந்தது. மிகுந்த அச்சம் அவர்களை ஆட்கொண்டது. வானதூதர் அவர்களை நோக்கி, 'அஞ்சாதீர்... இதோ... மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று வாவீதின் ஊரிலே உங்களுக்காக மீர்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா. குழந்தை ஒன்றைத் துணிகளில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தி இருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அறிகுறியாகும்...'

(மகன் வாசித்து முடித்த பைபிளை தாயிடம் கொடுக்கிறுன்.)

தாய்: 'மகனே! எமது மீட்பராம் யேசு பிறப்பார் என்றதும் அந்தச் செய்தியை அறிய எவ்வளவு பேர் காத்திருந்தார்கள் தெரியுமா?'

மகன்: 'ஆமாம் அம்மா! பெரிய பெரிய அரசர்கள்... ஆலய மூப்பர்கள்... ஞானிகள்... இறைவாக்கினர்...இப்படி எல்லோரும் காத்திருந்தார்கள் அம்மா...'

தாய்: 'சரியாகச் சொன்னுய் மகனே... ஆனுல்...மகனே அவர் வந்து பிறந்த இடமோ இவர்கள் அனைவரும் கற்பனைகூடப் பண்ணியிருக்காத இடமான, எல்லாராலும் கைவிடப்பட்ட ஒரு மாட்டுக்கொட்டில்... அதேபோல் அவர் பிறந்துள்ள முதற்செய்தி யாருக்குத் தெரிவிக்கப்பட்டது என்று தெரியுமா மகனே?'

மகன்: 'ஆமாம் அம்மா... மந்தைகளை மேய்த்துக்கொண்டிருந்த இடையர்களுக்குத்தான் பாலன் பிறப்பின் முதற்செய்தி தெரிவிக்கப்பட்டது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்: 'உண்மைதான் மகனே... அந்த இடையர்களுக்குத்தான் அந்த முதற் செய்தி தெரிவிக்கப்பட்டது; அதுவும் எப்படிப்பட்ட இடையர்கள் அவர்கள் தெரியுமா...? தங்களிடம் பாதுகாப்பிற்காக ஒப்படைக்கப்பட்ட அந்த மந்தைகளை பயங்கர மிருகங்களிடமிருந்து பாதுகாக்க சாமவேளையிலும்கூட கண்விழித்திருந்து காத்திருந்த இடையர்கள்...'

மகன்: 'உண்மையாம்மா...,

தாய்: 'ஆமாம் மகனே! இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியது அதிகம் இருக்குது மகனே; ஆண்டவர் பணத்தையல்ல... படாடோபத்தையல்ல நல்ல மனத்தையே விரும்புகிருர். பணிவையும்... எளிமையையும் தாழ்ச்சியையும் விரும்புகிருர்; ஆகவே, மகனே எப்போதும் தாழ்ச்சியாக இருக்கப் பழகிக்கொள்...'

*(பீற்றர் கண்களைத் துடைத்துக்கொள்கிருன்.)*

தாய்: 'செபம் சொல் மகனே...'

மகன்: 'இரக்கமும் தயவும் நிறைந்த இறைவா... நாளை நள்ளிரவில் மீண்டும் பிறக்கப்போகும் அந்த நல்ல கிருபைக்காக உம்மைத் துதிக்கிறோம் ஆண்டவரே! வாழ்த்துகிறோம். ஆண்டவரே...! இந்த உலகத்தில் எனக்கு இருக்கும் ஒரேயொரு துணை அம்மா என்பதை நீர் அறிவீர் ஆண்டவரே: எனக்காக என் நல்வாழ்வுக்காக தினமும் கஷ்ரப்படும் என் அம்மாவுக்கு நல்ல உடற் சுகத்தையும் அருளையும் கொடுத்தருளும் ஆண்டவரே...!

வீட்டிற்கு துணையாக இருந்த இரண்டு அண்ணன்மார்களில் மூத்தவரை பாதுகாப்புப் படையினர் விசாரணைக்கு கொண்டுசெல்லப்பட்டு, பின்னர் காணமற்போன சங்கதியை நீர் அறிவீர் ஆண்டவரே...

அதன் தாக்கத்தால் உந்தப்பட்ட சின்ன அண்ணன், தனக்கும் இந்தநாட்டுக்கும் விடுதலை பெற்றுத்தரப் புறப்பட்டுச் சென்றதையும், பின்னர் வீரவணக்கத்துடன் வீதிச் சுவரொட்டியாகக் காணப்படுவதையும் நீர் அறிவீர் ஆண்டவரே......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பீற்றர் தன்னையறியாமலேயே முழங்காலில் படியிடு கிறுன்.)

மகன்: 'இப்போ எனக்கென்றிருக்கிற ஒரேயொரு துணை இந்த அம்மாதான் ஆண்டவரே. எனக்கு நல்ல கல்வியைத் தந்து எதிர்காலத்தில் நான் அம்மாவை நல்லபடியாகக் காப்பாற்றுவதற்குத் தேவையான அருளைத் தந்தருளும் ஆண்டவரே.'

'என் இனிய ஆண்டவரே! இன்று சாமப் பூசைக்கு வருவதற்காக என்னிடம் இருந்த ஒரேயொரு நல்ல சேர்ட்டைத் தோய்ச்சுப் போட்டேன் ஆண்டவரே. ஆனல் இன்று முழுவதும் மழை விடாமல் பெய்கிறது ஆண்டவரே. இதனுல் அந்த சேர்ட் காயவில்லை ஆண்டவரே. நான் சாமப் பூசைக்கு வர விரும்புகிறேன் ஆண்டவரே; நீர் வல்லவர் ஆண்டவரே...... ஏதாவதொரு வழியைக் காட்டுவீர் என்பதை விசுவசிக்கிறேன் ஆண்டவரே... சகல துதிகளையும், கனத்தையும் பிறக்கப் போகும் பாலன் யேசுவின் மூலம் இதோ தருகிறேன் ஆண்டவரே......'

பீற்றர்: (கண்களைத் துடைத்து விட்டு எழுந்து நிற்கிறுன்) 'சந்திரன்...! இந்த சொப்பிங் பையை அந்த அறைக்குள் போடுவதற்கு ஏதாவது நீக்கல் தெரிகிறதா எண்டு பார்.,

சந்திரன்: பீற்றர் உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு......? உன்ர ஆசை மகனுக்கெண்டு வாங்கியிருக்கிற ரீ சேர்ட்டையா இங்கு போடப் போருய்...?'

பீற்றர்: 'ஒண்டும் கதைக்காத... மெதுவாப் பார்... ஏதாவது நீக்கல் தெரிகிறதா?'

(சந்திரன் எட்டி எட்டிப் பார்த்து விட்டு)

சந்திரன்: 'இந்த... இந்தப் பக்கம் ஒரு நீக்கல் தெரிகிறது.'

பீற்றர்: 'ஆண்டவரின் கருணைக்குக் காத்திருக்கிற இவர்களை நான் ஏமாற்றக் கூடாது...'

(மெதுவாகக் குனிந்து நீக்கலுக்குள்ளால் கையிலிருந்த சொப்பிங் பையைச் சுருட்டித் தள்ளி விடுகிறுன்.)

பீற்றர்: 'அப்பாடா...... இப்ப என்ர மனசு எவ்வளவு சந்தோஷப்படுகிறது தெரியுமா?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பையனுடைய உருக்கமான செபத்தைக் கேட்கக் கேட்க எனக்குள்ள எவ்வளவு போராட்டம் நடந்தது தெரியுமா......?'

சந்திரன்: 'அதுசரி......இப்ப உன்ர மகனுக்குச் சேர்ட்டுக்கு என்ன செய்யப் போகிரு......?

பீற்றர்: (பொக்கற்றைத் தொட்டுக் காட்டி)
இந்தா இதில நூறு ரூபாய் இருக்கு. இதில மகன் விரும்பிய பிளேன் கலரில ரீ சேர்ட் ஒண்டு வாங்கப் போறன்......'

(வெளியில் கையை நீட்டிப் பார்த்துக் கொண்டே)
'மழை குறைஞ்சிட்டுப் போல வா வெளிக்கிடுவோம்...'
(நடக்கிருர்கள்)

சந்திரன்: (நடந்து கொண்டே) அப்ப நாளைக்கு உன்ர ஓபிஸ் பிரன்ஸ்க்குப் பார்ட்டீ வைக்க என்ன செய்யப் போருய்...?'

பீற்றர்: 'பார்ட்டியா... அதெல்லாம் கிடையாது...... எங்கட வீட்டில என்னென்ன செய்து வைச்சிருக்கிறேமோ...... அதுதான் விருந்து...... விரும்பினுல் வரட்டும்......வா......திரும்பி மழை புடிக்கிறதுக்கிடையில போய்ச் சேர்வோம்.'

(விரைவாகப் போகிருர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலும் சுனையும்

## காட்சி: 1

(காண்டார மணியொன்று பெரிதாக ஒலித்து பின்னர் ஓசை மெல்லக் குறைகிறது)

குளக்கோட்ட மன்னர்: 'என்னுட்டவரும் போற்றும் சிவனே உன் தாள் போற்ற இந்தக் குளக்கோட்ட மன்னன் எதிர்பார்த்ததற்கும் மேலாக... ஆலயம் அமைக்கும் பணி சிறப்பாக அமைந்துவிட்டது. மகிழ்ச்சியில் திளைக்கவேண்டிய என் மனம்... சஞ்சலத்துள் சிக்கிக்கொண்டுள்ளது ஏன்? வடக்கேயிருந்து இந்த தெட்சணபதிக்கு வந்த போது... இங்கு எவருமே என்னை எதிர்க்கவில்லை. அப்படி இருக்க... இப்போது... அதுவும் ஆலயப்பணி முற்றுக முடிவடைந்துகொண்டிருக்கிற இந்த பொன்னுன வேளையில், ஏன் இந்தப் பரபரப்பு...? தசகண்ட இராவணன்... மூக்கோண லிங்கத்தைத் ஸ்தாபித்து... கன்னியா நதியின் ஏழு கொதி நீர்த் தீர்த்தத்தையும்... பாபநாசச் சுனை என்ற குளிர்ந்த தீர்த்தத்தையும் அமைத்து வழிபட்ட திருத்தலம் இது. இராவணனுக்குப் பிறகு... சிதைந்துபோன இந்தக் கோவிலை... இன்று திருத்தி புனரமைப்பிற்காக முயற்சி செய்யும்போது ஏன் இந்த எதிர்ப்பு...?'

(யாரோ வரும் காலடியோசை)

குளக்கோ: 'யார்? அமைச்சர் கலிங்கராயரா? வாருங்கள்.'

கலிங்கராயர்: (வந்துகொண்டே) 'மன்னர் மன்னு...! தனிமையில்... சிந்தனை இனிமையில்... கலந்து சுவைத்துக் கொண்டிருக்கிறீர்கள் போலும்... அந்தச் சிந்தனையைக் குழப்ப... ஒரு செய்தி கொண்டுவந்துள்ளேன் மன்னவா.'

குளக்கோ: 'என் சிந்தனையைக் குழப்புவதா... அது நீர்' கொண்டுவந்துள்ள செய்தியால் முடியாது அமைச்சரே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிங்க: 'அப்படியென்றால்... அந்தச் செய்தி...'

குளக்கோ: 'தங்களுக்கு முன்னரே அறிந்துவிட்டேன். இந்த வைதுலிய சமயத்தவனுகிய என்னால் கட்டப்படுகிற கோயிலை... தரைமட்டமாக இடித்துத் தள்ளிவிட்டு என்னையும் சிறைபிடித்துக்கொண்டு போக... அரசி ஆடக சௌந்தரியின் போர்ப்படைகள் வந்துகொண்டிருக்கின்றனவே... இதுதானே அந்தச் செய்தி...?'

கலிங்க: 'ஆமாம் மன்னவா. ஆடகசௌந்தரியின் போர்ப்படைகள்... நமது எல்லையில் கூடாரம் அமைந்திருக்கிறது இப்போதுதான் ஒற்றன் ஒருவன் உளவு கூறினன். தாங்கள் ஏற்கனவே அறிந்துவிட்டீர்கள்... உங்களின் சிந்தனைக்குக் காரணமே இந்தச் செய்திதான் என்று எண்ணுகிறேன் மன்ன.'

குளக்கோ: 'இல்லை கலிங்கராயரே: எனது சிந்தனையெல்லாம்... அரசி ஆடகசௌந்தரியின் போர்ப்படையைப் பற்றியதல்ல...'

கலிங்க: 'அப்படியென்றால்... அது என்னவென்று நான் அறியலாமா மன்னவா?'

குளக்கோ: 'ஆம் நிச்சயமாக...! என் கவலைகளையெல்லாம் தாங்களும் அறியவேண்டும். தங்களின் மதி நுட்பமும், நல்லாலோசனையும் என்றும் எனக்கு வேண்டும்; எனது நீண்ட நாளைய ஆசையான... கோவில் உருக்கொண்டுள்ளது. இராவணன் காலத்திற்குப்பிறகு சிதைந்ததுபோல இந்தக்கோவிலும், என் காலத்திற்குப் பிறகு சிதைந்து போகக்கூடாது... கோவிற்பணி எந்தவித குறையுமின்றி திறம்பட பல்லாண்டு காலம் நடைபெறவேண்டும்; இதற்கு ஏற்ற வழி செய்யவேண்டும்... இதுவே தற்போதைய எனது கவலை.'

கலிங்க; 'மன்னர் பெருமானே! கட்டிய ஆலயத்தை வெட்டிப்பிளக்க வீரர் வந்துகொண்டிருக்கும் இந்தவேளையில்கூட... அதைப்பற்றிச் சிறிதும் கவலைகொள்ளாது கட்டிய ஆலயத்தைத் தொன்றுதொட்டுப் பராமரிப்பது எப்படி என்று கவலைப்படும் உங்கள் பண்பிற்கு... நான் தலை

வணங்குகிறேன்: மன்னர் மன்னு! கோவிற்பணி தொடர... குடிகளைக் கொண்டு வந்து இந்தப் பகுதியில் குடியேற்றினுல் போதும். அவர்கள் பள்ள வெளியிலுள்ள பூமியில் நெற்சாகுபடிசெய்து கோவிற்பணியை மேற்கொள்ளுவார்கள்...

குளக்கோ: ''கோயிலும் குடியிருப்பும் நல்ல யோசனை தான்... கொண்டு வருவதற்குக் குடிகளுக்கும் குறை வில்லை ஆனுல் போதிய குளங்கள் இல்லையே. பரந்து கிடக்கும் இவ்வளவு வயல்களுக்குப் போதிய நீர்ப்பாச்சும் வசதி கிடைக்கவில்லையே...'

கலிங்க: 'அதுவும் உண்மைதான் மன்னவா! நாடு செழிக்க... நமது கோவிற் பணி தொடர... பெரியதொரு குளம் கட்டப்படவேண்டும். அதை எப்படி முடிப்பது என்பது சிக்கலான பிரச்சினை...... (உரத்த தொனியில்) யாரங்கே? என்ன தகவல்?'

சேவகன்: (வணங்கிக்கொண்டே) 'மன்னிக்கவேண்டும் மகாராஜா... யாரோ ஒரு பெரியவர் ஈழத்து அரசியின் ஆடகசௌந்தரியின்... அமைச்சராம்... தங்களைக் காண வந்திருக்கிருர்...'

குளக்கோ: 'அரசி ஆடகசௌந்தரியின் அமைச்சர் வந்துவிட்டாரா? உடனே அழைத்து வாருங்கள்'

(சேவகன் வணங்கிச் செல்கிருன்)

கலிங்க: 'கோவிற் பணியைச் சிறப்பிப்பது எப்படி என்பதில்.. எம்மையே மறந்துவிட்டோம்... ஈழத்தரசியின் அமைச்சர் போருக்கு வந்துவிட்டார்? இனிச் செய்வது யாது?'

குளக்கோ: 'ஆரம்பத்திலிருந்த நிலைமை... இப்போது இல்லையென்றே நான் நினைக்கிறேன். நம்மை இங்கிருந்து துரத்திவிடுமாறு அமைச்சரை அரசி அனுப்பியுள்ளதாக நமது ஒற்றர் படைத்தலைவன் தகவல் தந்துள்ளான். ஆனுல்... இப்போது அமைச்சர் பிரம்மராயர் படைகளின் துணையின்றி தன்னந்தனியே, கால்நடையாக வந்து கொண்டிருக்கிருர்? அதோ... அவரும் வந்துவிட்டார்'. (அமைச்சர் பிரம்மராயர் உள் நுழைகிருர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளக்கோ: 'ஈழத்தரசியின் மதிப்பிற்கும் மாண்பிற்கும் உரிய அமைச்சர் பிரம்மராயரே! வாருங்கள்... என்னைச் சிறை பிடிக்கத் தன்னந்தனியாக வந்துள்ள தங்கள் திடசித்தத்தைப் பாராட்டுகிறேன்'.

பிரம்ம: (வந்துகொண்டே) 'தாங்கள் கூறுவது உண்மை தான்... ஆனாலும் இப்போது நான் தங்களைக் கைது செய்யும் நோக்கோடு வரவில்லை. மதிப்பிற்குரிய எமது அரசியார் ஆடகசௌந்தரி அவர்கள்... தமது கட்டளையில் சிறிது திருத்தம் செய்துள்ளார். தங்களிடம் திறை கேட்பது... தரமறுப்பின் போருக்கு அழைப்பது என்பதே வேண்டுகோளாகும்.'

குளக்கோ: அமருங்கள் பிரம்மராயரே. திறை அல்லது போர்... (சிரித்துவிட்டு) நான் இப்போது மேற்கொண்டிருப்பது கோவிற்பணி. மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பது குளம் ஒன்றைக் கட்டுவதற்கு. இவை இரண்டும் பூரணமாக முற்றுப்பெற்றதும் அரசிக்குத் தேவையான திறையைச் செலுத்துவோம். பின்னர்... இந்த நாட்டைவிட்டே சென்று விடுகிறேன். அதற்குப் பின் இந்த தெட்சணபதிக் கோயிலை உங்கள் அரசி வந்து பார்க்கட்டும். இடித்தெறிய நினைத்தால்... அப்படியே செய்யட்டும். அதைவிட்டு... இவற்றுக்காக நான் ஒருபோதும் அரசியாரோடு போர் செய்யப் போவதில்லை.'

பிரம்ம: 'குளக்கோட்ட மன்னா...! இந்தச் செங்குத்தான மலையில் சௌந்தர்யமிக்க பெரிய கோவிலை வெகு இலகுவாகக் கட்டியெழுப்பியுள்ளீர்கள். தங்களின் மற்றைய திட்டமும் திறமையாகச் செயற்பட... எமது ஆசிகளைக் கூற விரும்புகிறேன்.'

குளக்கோ: 'நன்றி பிரம்மராயரே! நன்றி!! ஆனால்... இந்தக் கோவிலைக் கட்டி எழுப்பியது போல் அவ்வளவு சுலபமானதல்ல குளம் அமைக்கும் வேலை. அதுவும்... பெரியதொரு குளம்.'

பிரம்ம: 'தெட்சணகைலைக்குத் தென்மேற்கில்... தன்பல வெளி... ஒன்றிருக்கிறது. அதற்குப் பக்கத்திலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மலைகளையும் பொருத்தி... ஒரு அணையைக் கட்டி விட்டால்...'

குளக்கோ: 'நல்லதொரு யோசனை... ஆனால்... அது மனிதரால், அதுவும் என் ஆயுட் காலத்திற்குள் செய்து முடிக்கக்கூடிய வேலை அல்லவே பிரம்மராயரே!'

பிரம்ம: 'எங்கள் அரசிக்கு இந்தக் குளம் அமைக்கும் வேலை... ஒரு நாள் வேலை.'

குளக்கோ: 'உண்மையாகவா...?'

பிரம்ம: 'ஆம்...! இராட்சதப் பூதங்கள் எங்கள் அரசிக்கு அடிமையாக இருக்கின்றன. அவற்றின் துணை கொண்டு அரசி விரும்புவாராயின்... இந்தக் குளத்தை மிகக் குறுகிய காலத்தில் முடிக்கக்கூடும். குளந்தொட்டு வளம் பெருக்குவதில் எங்கள் அரசியின் முன்னோர் பெரு விருப்பம் கொண்டவர்கள் மன்னா!'

குளக்கோ: 'குளம் அமைக்கும் வேலை மட்டும் முடிந்து விட்டால் நான் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது அமைச்சரே. ஈழத்தரசி ஆடகசௌந்தரி நினைத்தால்... இந்த வைதுலிய சமயத்துவனின் திட்டத்திற்கு உங்கள் அரசி சம்மதிக்க வேண்டுமே?'

பிரம்ம: 'எங்கள் அரசியின் நடுநிலை தவறாத ஆட்சியில்... மதபேதம் இடையாது மன்னவா.'

குளக்கோ: 'உண்மை அதுவானால்... மகிழ்ச்சி ஆனால்... இந்த ஆலயத்தைக் கட்டி எழுப்பியதற்காக... உங்கள் அரசி என்மீது வெறுப்புக்கொண்டிருப்பதும்... போருக்கு ஆயத்தம் செய்வதும் முரணான செய்கை அல்லவா?'

பிரம்ம: 'மன்னவா... எங்கள் அரசி, தங்கள் மீது வெறுப்புக்கொண்டிருப்பது உண்மைதான். ஆனால்... அதற்குக் காரணம்... தாங்கள் நினைப்பதுபோல... கோயில் கட்டி எழுப்பியதல்ல. இங்கு கட்டப்பட்டிருந்த ஏனைய மத ஆலயங்கள் உங்களால் இடித்து எறியப்பட்ட செய்கையே... வெறுப்புக்குக் காரணம். இப்போதுகூட ஒன்றும் தாமதமாகிவிடவில்லை. உங்களால் இடித்தழிக்கப் பட்ட அந்த ஆலயங்களைக் கட்டியெழுப்ப உடன்படுவீர்

களானல்... குளம் கட்டித்தரும் வேலையை... ஒப்புக் கொள்ள எங்கள அரசியைக் கேட்கலாம் மன்னவா.'

குளக்கோ; 'என்ன அருமையான ஒப்பந்தம்... மதி நுட்பம் நிறைந்த பிரம்மராயரே... உங்கள் தூதும்... விடுவிக்கும் வேண்டுகோளும் என் மனதில்... என்றுமில்லா நிறைவை ஏற்படுத்துகிறது. குளம் கட்டித்தர உங்கள் அரசியார் ஒப்புக்கொள்ள மறுத்தாலும்கூட... நிச்சயமாக என்னல் இடிக்கப்பட்ட அந்த ஆலயங்களை மீண்டும் கட்டித் தருகிறேன் என்று ஆடகசௌந்தரி அரசியாரிடம் கூறுங்கள்.'

பிரம்ம: நல்லது மன்னவா...! என் தூதின் பெரும் பகுதி... ஏன்... முழுவதுமே வெற்றியில் முடிந்துவிட்டதாகவே எண்ணுகிறேன். விரைவில் மகிழ்ச்சியான செய்தியுடன் திரும்புவேன்.'

## காட்சி: 2

(மேள வாத்தியங்களின் இசை கேட்டுக்கொண்டிருக்கிறது)

குரல்: 'ஈழத்தின் இணையற்ற ஆடகசௌந்தரி அரசியார் வாழ்க...! அவர்தம் நடுநிலை தவறு நீதியாட்சி வாழ்க...!'

பலகுரல்கள்: 'வாழ்க...! வாழ்க...!'

குளக்கோ: ஈழத்தின் எழில் பொருந்திய... வீரம்மிக்க தமிழரசியின் வருகையால் அருள்பெற்ற இந்த இடம்... ஒளிபெற்றுப் பிரகாசிக்கிறது... தங்கள் வருகையை இன்று இயற்கையே இதயம் நிறைந்த வாழ்த்துக்களுடன் வாழ்த்துக்கூறி வரவேற்கின்றது.'

ஆடகசௌந்தரி: 'தங்கள் வாழ்த்துக்கு... எம்மக்களின் சார்பில் நன்றி.'

குளக்கோ: 'அரசியாரே...! நன்றி கூறவேண்டியவன் நானல்லவா?'

ஆடகசௌந்தரி: 'திசையெல்லாம் புகழ் பரப்பத் தக்க திறன் மிகுந்த... எழில் பொருந்திய பெரும் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை எழுப்பி... இந்த மலையை ஒரு சிற்பக்கூடமாக்கி அழகுபடுத்தி வளப்பாக்கிய தங்களுக்கு... நானல்லவா நன்றி கூறவேண்டும்.'

குளக்கோ: 'எழில் மிகுந்த கோயிலை நான் எழுப்பியுள்ளேன் என்றால்... அதன் பணி என்றும் நிலைத்திருக்க, குளம் கட்டி வளம் பெருக்கிய தங்களுக்கு... நான் என்ன கைமாறு செய்வேனோ?'

கலிங்க: 'காலமெல்லாம் பாடுபட்டாலும் கட்டிமுடிக்க முடியாத மாபெரும் வேலையைத் தங்களின் பூதப்படைகள்... எவ்வளவு விரைவாகச் செய்துமுடித்துவிட்டன... எண்ணி ஒன்பது நாட்களில் முடித்துவிட்ட பெருமையை... எப்படி வர்ணிப்பது என்று தெரியாமல் நாம் திகைக்கிறோம் அரசியாரே: இதனை எப்படி நாம் மறக்கமுடியும்...?'

ஆடகசௌந்தரி! 'நன்றிக்கடனை மறவாத உங்கள் மன்னன்... கட்டப்பட்ட அந்தக் குளத்திற்கு எங்கள் பூதப் படைகளின் தலைவனின் பெயரையே வைக்கத் தீர்மானித் திருப்பதாக அறிந்தேன்.'

கலிங்க: 'ஆம்! அது உண்மைதான் அரசியாரே... அந்தக் குளம் இன்று முதல் பூதப்படைகளின் தலைவன் காந்தனைக் குறிக்கும் முகமாக... காந்தளைக்குளம் என்று அழைக்கப்படும்.'

குளக்கோ: 'நான் எதிர்பார்த்ததிலும் சிறப்பாக அமைந்துவிட்டது கோவிற்பணி... என் கடமை முடிந்து விட்டது.'

பிரம்ம: 'இல்லை மன்னவா இல்லை... தங்களின் கடமை இன்னும் முற்றுப் பெறவில்லை.'

குளக்கோ: 'அமைச்சர் பிரம்மராயரே... என் கடமை இன்னும் முடியவில்லையா? இன்னும் நான் என்ன செய்ய வேண்டும்... கூறுங்கள். செய்து முடிக்கத் தயாராக இருக்கிறேன்.'

பிரம்ம: 'தங்களின் திட்டம் யாவும் செயலாக்கிமுடிந்த பின்... எங்கள் அரசிக்கு திறை வழங்குவதாக ஒப்புக் கொண்டீர்களே... மறந்துவிட்டீர்களா?'

குளக்கோ: 'இல்லை... மறக்கவில்லை... எவ்வளவு திறை வேண்டுமோ கேளுங்கள்... தங்கள் மனம் விரும்பும் அளவிற்கு திறை தர நாம் தயாராக இருக்கிறோம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்ம: 'உண்மையாகவா... எங்கள் அரசிக்கு வேண்டியளவு திறை தரத் தயாராக — சித்தமாக இருக்கிறீர்களா மன்னா? இந்த நாட்டின் எழில் வளங்கள் மேலும் பல்கிப் பெருகி பலன் தர... பல நல்ல திட்டங்கள் எம் அரசியாரிடம் உண்டு மன்னவா... அதைச் செயலாக்குந் திறன் தங்களிடமே நிறைய உண்டு. எனவே......'

கலிங்க: 'எனவே...! மறைக்காதீர்கள் பிரம்மராயரே... மறைக்காது கேளுங்கள்.'

பிரம்ம: 'அமைச்சர் கலிங்கராயரே...! நான் எதையும் மறைக்க விரும்பவில்லை. திறமைகள் திசைபட்டு சிதறி இருக்காது... ஒன்றாக இணையவேண்டும் என்று கூறுகின்றேன்.'

கலிங்க: 'கருத்துத் தெளிவாக இல்லையே?'

பிரம்ம: 'தங்கள் மன்னனையே திறையாக நாம் எதிர் பார்க்கிறோம்...'

ஆடகசௌந்தரி: 'அமைச்சரே... தாங்கள் எதைக் கூறுகிறீர்கள்?'

பிரம்ம: 'மகிமைக்குரிய ஈழத்து அரசியாரே... தங்கள் ஆட்சியில் ஈழநாடு எழில் பெற்றுத் துலங்குவதை யாவரும் அறிவர்... பேரெழில் பெற... தக்க துணை நலம் வேண்டும் என்கிறேன்...'

குளக்கோ: 'இன்னும் பூடகமாகவே பேசுகிறீர்கள்...'

பிரம்ம: 'நாம் நம் அரசியார் ஆடகசௌந்தரியின் சார்பில்... தங்கள் மன்னனையே திறையாக எதிர்பார்க்கிறோம்.'

கலிங்க: 'நமது மதிப்பிற்குரிய எமது மன்னர்... இதை மறுக்கமாட்டார் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை... ஒரு நல்ல நாளில்... தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவோம்...'

குரல்: 'மன்னர் மன்னன் குளக்கோட்டன் வாழ்க......! அவர்தம் கோவிற்பணி வளர்க...! எழில் மிக்க எம் அரசி ஆடகசௌந்தரி வாழ்க...! அவர்தம் குளம் தொட்டு வளம் பெருக்கும் பணி வளர்க.........!'

(மங்கள இசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா ஜோதி

*(இரவின் அமைதியைக் குறிக்கும் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றன)*

குரல்: ''காலம் காலமாக...மனிதன் செய்த பாவங்கள் எல்லாம்... நிழல்போல் அவனைத் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

சித்தார்த்தர்: 'ஆமாம்...! இந்தக்குரல்...!பௌராணிகரின் குரல்தான்... இராஜசபையில் இப்படித்தான் அன்றுசொன்ஞர். மனிதனுடைய பாவம் அவனை நிழல்போல் தொடர்ந்துகொண்டிருக்கின்றன... (சிரித்துக்கொண்டே) 'பாவம் மனிதனை நிழல்போல் தொடருகிறதா எதற்காக...? அப்படியானல்... அந்த மனிதனையே பாவம்செய்யாதவனுக மாற்றிவிட்டால்... மாற்றிவிட்டால் பிறகு எப்படி நிழல் அவனைத்தொடரும்...?? இந்த நிழல் எப்படித் தோன்று கிறது? ஒளியினுல்தானே...! ஒளி இல்லாவிடில் உலகில் நிழல் ஏது...? ஒவ்வொரு ஜீவனும் ஒளியினுல் தன் பாவத்தை உணரமுடியாது... அப்படியானல்... மனித னுக்கு ஒளி நிச்சயம் வேண்டும்! ஆனல்... அதற்காக பாவம் என்கிற நிழல்... வேண்டவே வேண்டாம்; மனி தனை பாவம் நிழலற்ற ஜீவனுக எப்படி மாற்றலாம்''

குரல்: ,மனிதர்களைப்போல் தேவர்களுக்கு நிழல் கிடைக் காது... ஏனெனில் அவர்கள் ஒருபோதும் பாவம்செய்வ தில்லை...'

சித்தார்: (சிரித்துவிட்டு) 'தேவர்கள் பாவம் செய்யாத வர்களா?... இல்லை ஒருபோதும் அப்படி இருக்கமுடியாது. தேவர்கள் செய்கிற பாவம் அவர்கள் உருவின் மேலேயே விழுந்து களங்கத்தைத் தெட்டத்தெளிவாகச் காட்டிக் கொண்டிருக்கிறது... அதோ...இந்த மாளிகையின் சாளரத் தின் வழியாகப் பொழிந்துகொண்டிருக்கும் அந்தப் பூர ணச்சந்திரனின் முழுவட்ட ஒளிக்கு மத்தியில்... ஒரு களங் கம்... நிழல் கண்ணுடிபோல் தெளிந்து தெரியும் இந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்து நீருக்கு அடியில் கிடக்கும் பொருட்கள் எவ்வளவு தெளிவாகத் தெரிகிறது... அதேபோல் அந்தச் சந்திரனின் களங்கமும் தெரிகிறதே... அது விட்டகலாதா...? ஒவ்வொரு மனிதனையும் பாவம் செய்யாதவனாக மாற்றிவிட வேண்டும்; இது முடியுமா...?'

சித்தாத்: 'என் காலடியில்... என்ன இது...? நிழல்... நிழல் என்றால் பாவம் என்றல்லவா பௌராணிகர் கூறுகிறார்... அப்படியானால்... இதோ... நிழல்... (நிமிர்ந்து பார்த்துவிட்டு) யார்...? யசோதரையா என் அன்புமனைவி. அப்படியானால்... யசோதரை பாவத்தின் உருவமா?... (அவளைப் பார்த்து) யசோதரை... இரவு நெடுநேரமாகி விட்டதே... இன்னும் நீ தூங்கவில்லையா...?'

யசோதரை: (வந்துகொண்டே) 'இந்த திறந்த வெளியில் நின்றுகொண்டு... நீங்கள் ஏதோ சிந்தித்துக்கொண்டிருக்கிறீர்கள்... நீங்கள் தூங்காதபோது... நான் மட்டும் எப்படி...?'

சித்தாத்: நீ தூங்கக்கூடாது என்று ஏதாவது சட்டமா? யசோதரா என்னைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம்.'

யசோ: 'அப்படிச்சொல்லவேண்டாம்... கவலை என்பது உலகத்தில் எல்லோருக்கும் உள்ளதுதான்... ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவலை. பூலோகத்தைப் பற்றிச் சிலருக்கு கவலை... இருக்குமானால் விண்ணுலகத்தைப் பற்றிச் சிலருக்குக் கவலை; பூலோக பாசத்தை அறுத்தவன்... விண்ணுலகத்தைப் பற்றிக் கவலைப்படுகிறான். விண்ணுலகத்திலும் பந்தப்படாதவன்... பரம்பொருளைப்பற்றிக் கவலைப்படுகிறான்... கவலை அற்றவர்கள்... உலகில் காண்பது அரிது. எனக்கு ஒரு கவலை... அது உங்களைப்பற்றியது; இந்தக் கவலையை நான் அனுபவிக்கவேண்டியவள் என் பதை தர்மம் விதித்திருக்கிறது; அதுதான் ஸ்திரி தர்மம்... இந்தச் சால்வையைப் போர்த்திக்கொள்ளுங்கள்.'

சித்தா: பனி பெய்கிறதென்று என் உடலை மறைக்கிறாய்? இப்படி எவ்வளவு நாட்களுக்கு என் உடலைப் போர்த்தி காப்பாற்றமுடியும்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யசோ: 'எவ்வளவு நாளைக்கென்றால்... என்னுடைய கடமை என்று கருதும்வரை... இதை நான் செய்வேன்.'

சித்தா: 'அவை எனக்கு விருப்பம் இல்லையென்றால்...'

யசோ: 'உங்களுக்கு விருப்பம் இல்லாத காரியம் எது வென்றாலும்... அதுவும் என் கடமை அல்லவா...'

சித்தா: (பெரு மூச்சு விட்டுக்கொண்டே) 'இந்த அரண் மனையில் வசிப்பது எனக்கு விருப்பமான காரியமல்ல...'

யசோ: 'அதுதான் உங்கள் விருப்பமானால்... உங்களை நான் தடுக்கமுடியாது. ஏனெனில் என்னுடைய ஸ்திரி தர் மம் பலவீனமானது. ஆனால் இந்த அன்பு...'

சித்தா: 'ஆமாம்...! இந்த அன்பு... அதனால் எதனையும் தடுத்து நிறுத்திவிடலாமா. யசோதரா... அந்த ஆயுதத்தை என்மீது பிரயோகிப்பாய் என்று நான் நினைக்கவில்லை.'

யசோ: 'அன்பு! அதை நீங்கள் ஏதோ ஆயுதமாகக் கருதிவிட்டதுதான் விந்தை. அன்பை ஆயுதம் என்று காட்டி ஒருவரைப் பயமுறுத்துவதா... இது பலாத்கார மான செயலல்லவா?'

சித்தா: இந்தச் சிக்கல் அறுபடவேண்டும் என்பதற் காகத்தான்... அப்படிச் சொன்னேன். பலவந்தமாக ஒரு வர் மனதைத் திருப்புவது அன்பு வழியாகாது என்பதை யசோதரை... நீயும் உணருகிறாய்.'

யசோ: 'சுவாமி...! நான் அதை நன்கு உணருகிறேன். நல்ல குலவிளக்காக விளங்க நினைக்கும் பெண்கள் அன்பை ஆயுதமாகக்கொண்டு வாழ்வைத் தேடமாட்டார்கள். என்று... எனக்குத் தெரியும். சித்தத்தைத் தெளியவைக் கும் அமுதம்போல அன்பை ஊட்ட நினைப்பார்கள். ஆனால்... அதற்காக அன்பை மதியை மயக்கக்கூடிய மது வைப்போலாக்கிவிடமாட்டார்கள்.'

சித்தா: (சிரித்துக்கொண்டே) 'ஓஹோ...! என் சித்தத் தைத் தெளியவைக்கும் அமுதம்போல உன் அன்பைப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிறாயா?'

யசோ: 'சுவாமி... அன்பு இயற்கையாகப் பிறப்பது. அதன் காரியங்களும் இயற்கையானவைதான். உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான அன்பு... சுயநலநோக்கத்திற்கு அடிமையாகாது. இயற்கையாகவே ஒருவரது மனத்தை மாற்றவல்லது...'

(குழந்தை ஒன்று அழும் சத்தம் கேட்கிறது)

யசோ: 'குழந்தை இராகுலன் அழுகின்றான்... நான் போகட்டுமா...?'

சித்தா: 'சரி போ... யசோதரை...'

யசோ: 'அப்படியானால்... நீங்கள்'

சித்தா: 'நான் சிறிது நேரம் பொறுத்து வருகிறேன்.'

யசோ: 'நான் வருகிறேன்...'

(போகிறாள்)

சித்தா: 'உலகமெங்கும் அன்பு மார்க்கத்தைப் பரப்பி அதைச் சொர்க்கத்திலும் மேலானதாகச் செய்துவிட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஆனால்...... என் மனைவி... யசோதரை, என்மீது வைத்திருக்கும் அன்பை பலவீனப்படுத்தலாமா?... யசோதரையின் அன்பு முகம்... குழந்தை இராகுலனின் களங்கமற்ற முகம் என் திட்டங்களைத் தடுத்து நிறுத்திவிடுமா?...வலிய இருக்கும் ஒரு அன்பின் சக்தியில்... நான் ஒருபோதும் கட்டுப்படமாட்டேன். அதற்குப் பதிலாக... உலகம் முழுவதையும் அன்பின் ஆதிக்கத்தில் கட்டுப்படச் செய்வேன்.'

(கோழி கூவும் சத்தம்)

சித்தா: 'சாமக்கோழி கூவுகிறது. அத்தோடு என் மனப் பக்குவத்தைக் கலக்கியடிக்கும் பாசப் பற்றுதலுக்கும் ஒரு முடிவு கிடைத்துவிடும்... நித்திராதேவியின் அணைப்பில் தம்மை மறந்து அணைத்துக்கொண்டு எப்படித்தான் இவர்களால் தூங்கமுடிகிறதோ··· கண்மணி இராகுலன்... அவனது அன்புத்தாய் யசோதரை... இவர்களை விட்டு இப்படியே...'

குரல்: 'ஆமாம் சித்தார்த்தா...! இதுதான் சரியான தருணம். இப்பொழுதே புறப்படு இந்நேரம் உன் மனைவி யசோதரையின் ஸ்திரி தர்மம்... உன்னைத் தடுக்காது. ஆமாம்... அவள் உன்னைத் தடுக்கமாட்டாள்... ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தர்மத்தோடு கலந்து நிற்கும் பேரன்பு நிச்சயம் உன்னைத் தடுக்கும். எனவே இதுதான் தக்கசமயம்... இப்பொழுதே புறப்பட்டுவிடு...'

(உள்ளே நுழைகிறார்)

யசோ: யார் நீங்களா...? எப்பொழுது வந்தீர்கள்...? இவ்வளவு நேரம் உங்களுக்காக கண் விழித்திருந்தேன்... உங்களுக்காக கண்விழித்திருந்தேனே... இப்பொழுது பார்த்தா எனக்கு நித்திரை வரவேண்டும்? சுவாமி... உலகத்திலே எத்தனையோ மாயை... இதில் இந்த நித்திரையும் ஒரு மாயை. நல்லவேளை இப்பொழுதாவது விழித்துக்கொண்டேன்... வாருங்கள்... ஏன் நிற்கிறீர்கள்? ... ஆ...... உங்கள் உடம்பு பனியினால், தூங்காததினால் உங்கள் கண்கள் சிவந்து இருக்கின்றன. முகம் நன்றாக வாடியிருக்கின்றது. வாருங்கள் இனிமேலாவது கொஞ்சம் தூங்குங்கள்.'

சித்தா: 'என்னைத் தூங்கச் சொல்கின்றாயா யசோதரை... கொஞ்சநேரத்திற்கு முன்னால் நித்திரை என்பது ஒரு மாயை என்று சொன்னாய்... அந்த மாயைக்கு என்னையும் அடிமையாகச் சொல்கிறாயா?'

யசோ: 'என் விஷயத்தில் நித்திரை என்பது விளையாடுகிறது... அதனால் அப்படிச் சொன்னேன். ஆனால்.. அதற்காக நீங்கள்...?'

சித்தா: 'யசோதரை... நித்திரை மாத்திரமல்ல...விழிப்பும் மாயையாகத்தான் விளையாடுகிறது... அதுசரி... கேட்க மறந்துவிட்டேன்... நான் உள்ளே வரும்போது நிம்மதியாக உன்னை மறந்து உறங்கிக்கொண்டிருந்த நீ எப்படி திடீரென்று விழித்தெழுந்தாய்...?'

யசோ: 'அதுவா... கனவு ஒன்று...!'

சித்தா: 'கனவா... அது பெரிய மாயை... என்ன கனவு?'

யசோ: 'பயங்கரமான கனவுதான். அடர்ந்த கானகம். இரவு நேரம். எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது. ஒரு கணவனும் மனைவியும் வருகிறார்கள். மிகவும் களைப்போடு வந்த அவர்கள் இருவரும்... ஒரு மரத்தடியில் படுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கின்றனர். மனைவி நன்ருகத் தூங்கிவிடுகிருள்; அப்போது கணவன் எழுந்து உட்கார்ந்து சிறிது நேரம் யோசனை செய்தபின்... ஆழ்ந்த நித்திரையிலிருக்கும் தன் மனைவியை விட்டுவிட்டு... எங்கேயே போய்விடுகிருன்... மறுநாள் காலை நித்திரை கலைந்து எழுந்த அந்தப்பெண் பக்கத்தில் படுத்திருந்த தன் கணவனைக் காணுது அலறி அழுது கானகமெல்லாம் சுற்றி அலைந்து தேடுகிருள்... இது தான் கனவு... என்ன பரிதாபம்?... இரக்கமில்லாமல் இரவு வேளையில் பயங்கரமான கானகத்தில் ஒருவர் தன் மனைவியை விட்டுவிட்டு ஓடுவதென்ருல்... அது ஏதோ விதியாகத்தான் இருக்கவேண்டும்...'

சித்தா: (பெருமூச்சு விட்டுக் கொண்டே) இதெல்லாம் நடக்கவேண்டியதுதான் யசோதா... இந்தக்கனவு... நளன் தமயந்தியைப் பிரிந்த கட்டம் போலிருக்கிறது... நம்முடைய பாரதப்பெண்கள் எவ்வளவு சோதனைகளுக்கெல்லாம் ஆளாகியிருக்கிருர்கள். தெரியுமா? இதெல்லாம் உன்னைப்போன்ற பெண்களுக்கு வரவேண்டியதுதான்... அவ்வாறு நீயும் ஏதாவது சோதனைகளுக்கு ஆளாகவேண்டி வந்தால்...'

யசோ: 'உண்மைதான்...! நான் அந்தப் பெண்களைப் போன்ற பக்குவநிலையை அடையவேண்டும் என்றுதான் ஆசைப்படுகின்றேன். ஆனுல்... அப்படி ஏற்படும் வேளையில் அவர்களைப் போன்று பாக்கியவதியாவேனே என்றும் கவலைப்படுகிறேன்.'

சித்தா: 'நீயும் அவர்களைப்போன்ற பாக்கியவதிதான்... அவர்களுக்கெல்லாம் ஏற்பட்டதுபோன்ற சோதனைகள் உனக்கு ஏற்பட்டால்... சமாளிக்காமல் இருந்துவிடப் போகிருயா...யசோதா...?'

யசோ: 'என் நாயகரின் இலட்சியங்கள் உயர்வடைய வேண்டுமென்பதற்காக எப்படிப்பட்ட சோதனைகள் ஏற்படுவதாயினும் சமாளிக்கத் தயாராக இருக்கிறேன்... இராமன், அரிச்சந்திரன் போன்றவர்களுக்கு ஏற்பட்ட மனோதிடம் என் கணவருக்கும் ஏற்படவேண்டும் என பிரார்த்தனை பண்ணிக்கொண்டிருக்கிறேன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தா: 'யசோதரா...தன் மனைவியை நடுக்காட்டில் விட்டுவிட்டு ஓடும் அளவுக்கு இரக்கமற்ற சுபாவம் உள்ள வனாக நான் இருக்கமாட்டேன்...'

யசோ: (சிரித்துக்கொண்டு) 'கணவனால் துறக்கப்பட்ட மனைவி வீட்டிலிருந்தாலும் சரி... காட்டிலிருந்தாலும் சரி, இரண்டும் ஒன்றுதான்... சுவாமி...! நீங்கள் மிகவும் களைப் படைந்திருக்கிறீர்கள்... கொஞ்சநேரம் சயனித்துக்கொள் ளுங்கள்...'

சித்தா: 'ஆமாம்...! (போய்க்கொண்டு) கொஞ்சநேரம் தானே... சமாளித்துக்கொள்ளுங்கள்;'

(காட்சி மாற்ற இசை)
(காலை நேரத்தை உணர்த்தும் சத்தங்கள்)

யசோ: 'நான் சில நாட்களாக எதிர்பார்த்தது நடந்தே விட்டது... மனைவி என்ற எனது அன்புப் பிணைப்பிலிருந்து தன்னை விடுவித்துகொள்ளும் அளவுக்கு திடசித்தமும், மனப் பக்குவமும் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் உணருகிறேன்... பரம்பொருளே...! அ வ ரு க் கு எவ்வித ஆபத்தும் ஏற்படாமல் காப்பாற்றும்... அவரது லட்சியத் தில் சித்தியடைந்து உத்தமராக வரச்செய்யும்...'

(நடந்துவரும் காலடியோசை)

யசோ: 'யார்...மந்திரியாரா...? வாருங்கள்'

மந்திரி: 'அம்மணீ...! இளவரசரைத் தேடிக் கண்டு பிடிப்பதற்குப் பல திசைகளுக்கும் உளவாளிகளை அனுப்பி இருக்கிறோம். கவலைப்படவேண்டாம்.'

யசோ: 'அவரை எதற்காகத் தேடவேண்டும்? அப்படி அவரைத் தேடிக் கண்டுபிடித்தாலும் அவர் திரும்பி வரவே மாட்டார்.'

மந்திரி: 'தங்கள் கணவர்... மறுபடியும் அரண்மனைக்கு திரும்புவது... தங்களுக்கு விருப்பமில்லையா...?'

யசோ: 'எனக்கு... விருப்பமில்லை என்று பொருள் கொள்ளவேண்டாம்; நான் அவருடைய மனைவி; அவ ருடைய விருப்பத்திற்கு அனுசரணையாக நடந்துகொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதுதான் என் கடமை... அதுதான் ஸ்திரிதர்மம்... அவருடைய இலட்சியம் நிறைவேற... நான்...என் சுவாமியைத் துறக்கச் சித்தமாயிருக்கிறேன்.'

மந்திரி: 'அம்மணீ...! சில நாட்களுக்குப் பிறகு, உலகம் புத்தன் என்னும் ஜோதியை காணப்போகிறது... கண்டு ஆனந்திக்கப்போகிறது... ஆனல்... அவரை விட மகா ஜோதியை... நான் இன்று காண்கிறேன்...'

(யசோதரை குலுங்கிக் குலுங்கி அழுகிருள்)

(முடிவு இசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றில் இரண்டு

(ஆற்றுக்கருகில் விறகுவெட்டி)

விறகுவெட்டி: 'கடவுளே...! இப்ப நான் என்ன செய்யப்போகிறேன்... பட்டுப்போன இந்த மரத்தைவெட்டி எடுக்கிறது சுலபம்... வெட்டி எடுத்தா நல்ல விலைக்கு விக்கலாம் எண்டிருந்தன்... இப்ப நான் என்ன செய்யிறது...? கைதவறி இந்த ஆற்றுக்குள்ள என்ர கோடலி விழுந்துட்டுதே... கடவுளே... இனி நான் எப்பிடிச் சீவியத்தைக் கொண்டுபோகப் போறன்...? கடவுளே...! கடவுளே...!!'

(ஆற்றுக்குள்ளிருந்து கடவுள் மேலே எழும்புகிறார்)

கடவுள்: 'பக்தனே... ஏன் என்னை அழைத்தாய்...?'

வி.வெ: (உற்றுப்பார்த்து) 'ஆர்...! ஆர்...?'

கடவுள்: 'பயப்படாதே...! நான்தான் கடவுள்... ஏன் என்னை அழைத்தாய்...?'

வி.வெ: 'கடவுளே...! நான் ஒரு ஏழை... விறகுவெட்டி விக்கிறதுதான் என்ர பிழைப்பு; என்ர சீவியத்துக்கு உதவுகிற ஆயுதம் கைதவறி இந்த ஆத்துக்குள்ள விழுந்து போச்சு. எனக்கு நீந்தத் தெரியாது... அந்த ஆயுதம் இல்லாட்டி என்னால சீவிக்க ஏலாது...'

கடவுள்: 'ஆயுதமா...? என்ன மாதிரியான ஆயுதம்...? எஸ். எல். ஆரா...? ஏகேயா...'

வி.வெ: 'ஐயையோ... அதெல்லாம் இல்லைங்க சாமீ... மரம் வெட்டுற கோடாலி'

கடவுள்: 'அப்படியா... கொஞ்சம் பொறு...'

(ஆற்றில் மூழ்கி ஒரு கோடாரியுடன் எழும்புகிறார்)

கடவுள்: 'இந்தா உனது கோடாரி...'

வி.வெ: (உற்றுப்பார்த்துவிட்டு) 'இது பளபளவெண்டு இருக்குது இது என்ரதில்லை சாமீ...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள்: 'இது தங்கக் கோடாரி...!'

வி.வெ: 'தங்கக் கோடாரியா...? உண்மையாகவா...?'

கடவுள்: 'கலப்பு எதுவும் இல்லாத சுத்தத் தங்கத்தால் செய்த கோடாரி'

வி.வெ: 'வேண்டாம் சாமி; தங்கமெல்லாம் வீட்டில வச்சிருந்தா கரச்சல் சாமி... அதோட... இதால ஒண்டும் வெட்டவும் ஏலாது... எனக்கு என்ர கோடாரிதான் வேண்டும் சாமி...'

கடவுள்: 'அப்படியா கொஞ்சம் பொறு...'

(ஆற்றில் மூழ்கி ஒரு கோடாரியுடன் எழும்புகிறார்)

கடவுள்: 'இந்தா உனது கோடாரி...!'

வி.வெ: (உற்றுப்பார்த்துவிட்டு) 'இதுவும் பளபளக்கிறதே...'

கடவுள்: 'இது வெள்ளியினால் செய்தது - விலையுயர்ந்த கோடாரி'

வி.வெ: 'ஐயோ சாமி...! இதுவும் என்ரதில்லை... என்ர கோடாரி... வெறும் இரும்புக்கோடாரி... தயவு செய்து அதை மட்டும் எடுத்துத் தாருங்கள் சாமி...'

கடவுள்: 'அப்படியா... கொஞ்சம் பொறு...'

(ஆற்றில் மூழ்கி ஒரு கோடாரியுடன் எழும்புகிறார்)

கடவுள்: 'இந்தா உனது கோடாரி...!'

வி.வெ 'ஆ...! இதுதான் என்ர கோடாரி சுவாமி... அப்பாடா இப்பதான் எனக்கு போன உசிர் வந்தது மாதிரி இருக்கு; பெரிய உபகாரஞ் சாமீ...'

கடவுள்: 'விறகுவெட்டி...! நீ ஏழையாய் இருந்தாலும் பிறர் பொருளுக்கு ஆசைப்படவில்லை. அதனால்... உனக்கு இந்த மூன்று கோடாரிகளையும் பரிசாகத் தருகிறேன்... பிடி. இந்தத் தங்கக் கோடாரியை... இந்த வெள்ளிக் கோடாரியை... இந்த இரும்புக் கோடாரியை......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மூன்றையும் கொடுக்கிறார்; விறகுவெட்டி வாங்கிக் கொண்டே)

வி.வெ: 'பெரிய உபகாரஞ் சாமி...'

கடவுள்: 'எப்போதும் உண்மையே பேசு...'

## காட்சி 2

(விறகுவெட்டி வந்துகொண்டே)

வி.வெ: 'அடியே பொன்னி...! வாவேண்டி கெதியா...'

குரல்: 'வாறனப்பா...! பொறுங்க. இங்க காலல முள்ளுக் குத்திப்போட்டுதெண்டு நான் அவதிப்படுறன்...'

வி.வெ: 'இதுக்குத்தான் நான் சொன்னனான்... உன்னை வரவேண்டாமெண்டு... நீ கேட்டாத்தானே நானும் வாற னெண்டு ஒத்தக்காலில நிண்டா...'

பொன்னி: (வந்துகொண்டே) 'இப்பவும் ஒத்தக்காலில தான் நிக்கிறன்...'

வி.வெ: 'அப்ப நீ நிண்டது பிடிவாதத்தில... இப்ப நீ நிக்கிறது முள்ளுக் குத்தினதில...'

பொன்னி: 'ஐயோ எனக்கு கால் வலிக்கிறதே... என்னால இனி ஒரு அடிகூட நடக்கேலாது...

வி.வெ: 'இதுக்குத்தானே சொன்னனான்... வராத வராத எண்டு; கேட்டியா... என்னமோ புதினமா இண்டைக்கு நான் விறகுவெட்டுற ஸ்டைல பார்க்கப்போற னெண்டு வெளிக்கிட்டனி... சரி சரி கதயவிட்டுட்டு கெதியா நட...'

பொன்னி: 'என்னால அசைய ஏலா... நடக்கேலா... இப்படியே இங்க... இந்த ஆற்றங்கரையில குந்திக்கொண் டிருக்கிறன்... நீங்க போய் விறகுவெட்டிக்கொண்டு வாங்க...'

வி.வெ: 'உன்னோட மினக்கெட்டா... இண்டைக்கு விறகுவெட்டினால் போலத்தான்... தனியா இருப்பியா...?!

பொன்னி: ஓமோம்...! தனியா இருப்பன்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி.வெ: 'அங்க இங்க போயிடாத... புறகு வழிய மறந்திடுவா... அப்படியே இருக்கணும் தெரியுமா... கெதியா நான் வந்திடுவன்...'

(விறகுவெட்டி போகிறுன்)

பொன்னி: (தனிமையில்) 'அம்மாடீ... இப்படியே எவ்வளவு நேரத்துக்குக் குந்திக்கிட்டிருக்கிறது? சும்மா எழும்பிச் சுத்திப்பார்ப்பம்... ஏதாவது... கொறிக்கக் கிறிக்க கிடைக்குமா எண்டு பார்ப்போம்...'

(எழுந்து போகிறுள்)

(விறகுவெட்டி தலையில் பெரியதொரு விறகுக்கட்டுடன் வருகிறுன்)

வி.வெ: 'அப்பாடீ... இண்டையப் போல மாச்சல் ஒரு நாளும் இல்ல... எங்க இவள் பொன்னிய காணம்... பொன்னி...! பொன்னி...!!'

(நாலாபுறமும் எட்டிப் பார்த்துக்கொண்டே)

'நாசமாப்போச்சு... இந்தக் காட்டுக்க எங்கவெண்டு தேடுறது? படிச்சுப் படிச்சுச் சொன்னனுன் அங்க இங்க கிளம்பாத எண்டு... ஒருவேளை இந்த ஆத்துக்குள்ள தவறி விழுந்திட்டாளோ? கடவுளே... இது என்ன சோதனை? மனுஷி இல்லண்டா எண்ட பாடு பெரும்பாடுதான்...' (மெதுவாக) கடவுளே...! (சிறிதுகூட்டி) கடவுளே...!! (சத்தத்துடன்) கடவுளே...!!!

கடவுள்: (ஆற்றுக்கு மேலாக தோன்றி) 'பக்தனே ஏன் என்னை அழைத்தாய்...?'

வி.வெ 'ஆ...! கடவுள்...!! கடவுள் எண்டா நீங்க தான் சாமீ கடவுள். கூப்பிட்ட குரலுக்கு டணார் எண்டு செவி குடுக்கிற கடவுளே! நீங்க நல்லா இருக்கணும்; கும்பிடுறன் சாமீ...'

கடவுள்: 'ஏன் என்னை அழைத்தாய்...?

வி.வெ: 'சாமி... சாமி (அழுதுகொண்டே) எண்டைக்குமில்லாம இண்டைக்கு என்ர மனுசுஷியும் இங்க காட்டுக்கு வந்தா... இந்தா இதிலதான் இருத்திப்போட்டு விறகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டிட்டு வர அங்காலப்பக்கம் போனனுன்; திரும்பி வந்து பாத்தா... அவளக் காணல்லே சாமீ. ஐயோ சாமீ... அவளில்லாம என்னுல தனிய சீவிக்கமுடியாது கடவுளே! அவள எப்படியாவது கண்டுபிடிச்சுத்தாங்க சாமி'

கடவுள்: 'உன்னுடைய மனைவியைக் காணவில்லையா...? இதுக்குத்தானு இப்பிடி நிண்டு புலம்புகிருய்? விட்டது கவலை எண்டு வீடு போய்ச் சேர்......'

வி. வெ: 'அப்பிடிச் சொல்லப்படாது சாமீ...... அவள் எனக்கு வேணும் சாமீ. நீங்க நினேச்சா அவள எப்பிடியா வது கண்டு பிடிச்சு தருவீங்க சாமீ... உங்களாள முடியும் சாமீ......'

கடவுள்: 'உன்னுடைய மனைவிமீது இவ்வளவு பாசம் வைத்திருக்கிருயே...நல்லது... நான் கண்டு பிடித்துத் தரு கிறேன்.'

வி. வெ: உபகாரம் சாமீ'

(கடவுள் ஆற்றுக்குள் மூழ்கி, ஒரு பெண் ணேடு வெளிவருகிருர்).

கடவுள்: 'இதோ... உன்னுடைய மனைவி...'

வி. வெ: (தனக்குள்) இது என்ர மனுஷியவிட செவப்பா......மூக்கும் முழியுமா நல்லாத்தான் இருக்கிரு... இப்ப நான் என்ன செய்யிறது?' (யோசிக்கிருன்)

கடவுள்: 'என்ன அதிகமாக யோசிக்கிருய்? இதுதானே உன்னுடை மனைவி.?

வி. வெ: (தயங்கி தயங்கி) 'ஆமாம் சாமீ...... இவதான் என்ர மனுஷி.'

கடவுள்: (ஆச்சரியத்தோடு) என்ன? விறகுவெட்டி...... நன்ருகப் பார்த்துச் சொல்... இதுதானே உன்னுடைய மனைவி?'

வி. வெ: 'ஆமாம் சாமீ...!... இவதான் என்ர மனுஷி.'

கடவுள்: (தனக்குள்) 'என்ன இது? அப்பட்டமான பொய்யைச் சொல்கிருன்? இருக்கட்டும் பார்த்துக் கொள் கிறேன்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள்: 'விறகுவெட்டி...... நான் உனக்கு ஒருநாள் இரண்டு பரிசுகளைத் தந்தேனே... ஞாபகம் இருக்கிதா?'

வி. வெ: ஆமாம் கடவுளே... ஞாபகம் இருக்கு. அதை மறக்க முடியுமா? ஒரு தங்கக் கோடாலி ஒரு வெள்ளிக் கோடாலி... ஆமாம் சாமி... உங்க ஞாபகமாக அந்தக் கோடாரிகளின் கைப்பிடிகளைப் பத்திரமாக வைச்சிருக்கிறன்...'

கடவுள்: ஞாபகம் இருக்கா? அப்படியானால் சந்தோஷம் தான்: ஏன் உனக்கு நான் அந்தப் பரிசுகளைத் தந்தேன்?'

வி. வெ: 'அதுவா...... அது வந்து... அப்ப நான் நேர்மையா நடந்ததோட, மத்தவங்கட சாமான்களுக்கு ஆசைப் படாம இருந்ததக்குத்தான் அந்தப் பரிசுகளைத் தந்தனீங்க.'

கடவுள்: சரியாகச் சொன்னாய். உன் நேர்மைத் தனத்துக்குத்தான் அந்தப்பரிசுகள்... அப்பிடி நேர்மையாக நடந்த நீ..... இப்ப பொய் சொல்கிறாய்... அப்படித்தானே...?'

வி. வெ: (தடுமாறிக் கொண்டே) 'ஆமாம்!...இல்லை...'

கடவுள்: 'இது உன் மனைவியா?'

வி. வெ: 'இல்லை சாமி... இது என் மனைவி இல்லை.'

கடவுள்: (கடுமையாக) 'அப்படியானால் அப்போது ஏன் பொய் சொன்னாய்...?

வி. வெ: அது...... வந்து......'

கடவுள்: 'ஏன் தயங்குகிறாய்?... உன்னுடைய மனைவியை விட இந்தப் பெண் அழகாக இருக்கிறாள்... அப்படித் தானே?'

வி. வெ: (சட்டென்று) 'இல்லை சாமி... இல்லவேயில்லை அப்படியெல்லாம் தப்புத் தண்டாவுக்கு நான் போனதே யில்லை.'

கடவுள்: 'அப்படியானால் ...... ஏன் பொய் சொன்னாய்?'

வி. வெ: 'வந்து......வந்து......'

கடவுள்: 'விரைவாகச் சொல்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. வெ: 'அது...என்ர மனுஷியை கண்டு பிடிக்க ஆத்துக்குள்ள இறங்கினிங்க...... நீங்க முதல்ல ரதிமாதிரி பொம்பிளேய காட்டினீங்க... அது என்ர மனுஷியல்ல; எண்டு சொன்னு... பிறகு இன்னுமொருக்கா ஆத்துல மூழ்கி சிலுக்கு மாதிரி இன்னுமொரு பொம்பிளேய காட்டுவீங்க... நான் இல்லேயெண்டு சொன்னு... ஆத்துக்குள்ள பிறகு போய் என்ர மனுஷியக் காட்டுவீங்க... நான் சந்தோஷத்தில இதுதான் சாமீ என்ர மனுஷி எண்டு சொல்லுவன்... நீங்க என்ர நேர்மைய பாத்திட்டு... இந்தா இந்தா இந்த மூண்டு மனுஷிகளேயும் உனக்கே தருகிறேன் எண்டு சொல்லுவீங்க... அப்புறம் என்ர பாடு பெரும்பாடாய்ப் போயிடும் அதுதான் முதல்ல இல்லேயெண்டு சொல்லாமல பொய் சொன்னனுன். என்ன மன்னிச்சிடுங்க சாமீ...'

கடவுள்: 'நீ பொய் சொல்லி விட்டாய்; அதனுல்...... உன்னேத் தண்டிக்கப் போகிறேன்'.

வி. வெ: தண்டிக்கப் போறீங்களா சாமீ... வேண்டாம் கடவுளே...! வேண்டாம்; எனக்குத் தெரியும் நீங்க எப்பிடித் தண்டிப்பீங்க எண்டு...'

கடவுள்: (திகைப்புடன்) 'என்ன? எப்பிடித் தண்டிப்பேன் என்று உனக்குத் தெரியுமா?

வி. வெ: 'ஆமாம் சாமீ... என்ர மனுஷியக் கண்டு பிடிச்சுத் தராம விடப் போறீங்க...... அப்படித்தானே? ஐயையோ! அப்பிடிச் செய்திருங்க சாமீ... எனக்கு அவள் இல்லாம சீவிக்க ஏலாது......'

கடவுள்: 'மனிதா...! நான் தரும் தண்டனே நீ நினேப்பது போலிருக்காது...... தெரியுமா?

வி. வெ: 'அப்படீன்னு... எனக்கு விளங்கல்லேயே சாமீ...'

கடவுள்: 'நீ பொய் சொன்னதிற்காக...'
(சொல்லிக் கொண்டே ஆற்றில் மூழ்கி, பொன்னியோடு எழும்புகிருர்.)
'இந்தா உனது மனேவி...... பொன்னி......'

வி. வெ: (உற்சாகத்துடன்) 'ஐயோ என்ர மனுஷி...... உபகாரம் சாமீ......உபகாரம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள்: 'இந்தா......இது நீ ஆசைப்பட்ட பெண்...'

வி. வெ: 'ஐயோ சாமீ...! இது என்ன குழப்பம்...

கடவுள்: 'ஆமாம்! புதுக் குழப்பம்தான்... நீ பொய் சொன்னதற்குத் தண்டனை இந்த இரண்டு பெண்களையும் கூட்டிக் கொண்டு போய் குடும்பம் நடத்து...'

வி. வெ: 'இரண்டு பேரையுமா... என்ஞல் சமாளிக்க முடியாது கடவுளே...'

கடவுள்: 'சமாளிக்க முடியாதா... பொய் சொன்ன உனக்கு அதுதான் தண்டனை...'

(கடவுள் ஆற்றினுள் மறைகிருர்.)

வி. வெ: 'அடியே பொன்னி......கூட்டிக் கொண்டு வாடீ அவளை...'

(போகிருர்கள்)

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ட காலிலே.....

## காட்சி 1

(உரலில் அரிசி இடிக்கும் ஓசை கேட்டுக் கொண்டிருக்கிறது)

குரல்: சாந்தி ...... செல்வச் செழிப்பில் எப்படி எப்படியெல்லாமோ வாழ்ந்த... உனக்கா இந்தக் கதி...? கணவனின் உழைப்பில் உல்லாசமாய் இருந்த காலம் போய் இன்று... தன்னந்தனியளுக... வியர்வை சிந்தி ... உடலிளைக்கப் பாடுபட்டுச் சீவிக்க வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டாயே... இதை விதி என்பதா? இந்த உலகத்தின் சதி என்பதா...

உலக்கையைத் தட்டி உரலில் தட்டிச் சாந்தி வைக்கும் ஓசை – அரிதட்டில் மா அரிக்கும் ஓசை

நடந்து வரும் காலடி ஓசை

ரஜனி: அம்மா... அம்மா ஆ... இங்கேயா நிக்கிறீங்க...

சாந்தி: ஆர்... ரஜனியா...! மகளே பள்ளிக்கூடம் விட்டுட்டா... உள்ளுக்குப் போய் யூனிபோம கழட்டிப் போட்டுட்டு... மேலைக் கழுவிட்டு வா...

ரஜனி: (சிணுங்கலுடன்) அம்மா பிறகு மேலக் கழுவலாம் அம்மா... இப்ப எனக்குப் பசிக்குது.

அம்மா... காலையில பள்ளிக்கு வெளிக்குடக்க கூட ஒன்றும் சாப்பிடல்ல...

சாந்தி: என்ன செய்யிறது மகளே... ஆண்டவன் எனக்கு இப்படி ஒரு வாழ்க்கையைத் தந்துட்டானே. ம்... சரி... நீ போய் முகத்தக் கழுவிட்டு வா. நான் பாண் வாங்கித் தாறன்.

ரஜனி: (சலிப்புடன்) என்ன ... அம்மா இண்டைக்கும் பாண் தானு...? எத்தனை நாளைக்குத்தான் இந்தப் பாணைத் தின்றது...? இந்தா மா இடிக்கிறுயே... இண்டைக்காவது புட்டு அவிச்சுத் தரக்கூடாதா?

சாந்தி: என்ர மகளே... இந்தா... இப்ப பத்துக்கொத்து மா இடிக்கிறன்... ஆனு... அது எங்கட இல்ல என்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குத் தெரியுந்தானே மகளே... வார கிழமை கந்தப்பர் மகளுக்கு கலியாணம்... அங்க பலகாரஞ் சுடுறதற்கு இப்ப இடிச்சுக் குடுக்க வேணும் மகளே...

ரஜனி: என்னம்மா நீங்க; நா... இங்க நாங்க பசில கிடக்கிறம்... ஒரு சொட்டு மாவுக்கு வழியில்ல அங்க என்னடா வெண்டா பலகாரத்துக்கு மா இடிக்கினம்... நல்லா இருக்கு நியாயம்...?

சாந்தி: ஓமோம் மகளே... இந்த உலகத்தில நியாயம் அப்படித்தான் இருக்கு... ஒரு குறிப்பிட்ட சனங்களுக்கு ஓயாமல் கொண்டாட்டம்... எங்களப் போல ஏழைகளுக்கு எந்த நாளும் திண்டாட்டம்தான்... ம்... எங்களுக்கும் ஒரு காலம் வராமலா போகும்?

ரஜனி: எப்பவும் இப்பிடித்தான் சொல்லிச் சொல்லி ஏமாத்துறிங்க... (நடந்து செல்லும் ஓசை)

சாந்தி: ஐயோ ... தெய்வமே ... இது என்ன சோதனை? பெத்த மகளே என்னைப் பார்த்து ஏமாத்துறாய் எண்டு சொல்லிப் போறுள்... நாஞு ஏமாத்துறன்...? பள்ளிக்குப் போய் படிக்க வேணும் என்ற இவளுடைய ஆசைய நிறைவேற்ற... நான் எவ்வளவு பாடுபடுறன் எண்டு உனக்குத் தெரியாதா?... எட்டு வருஷத்துக்கு முதல் என்ர கணவர்... அவர் என்னை விட்டுப் போன போதே... நானும் எங்காவது குளத்தில விழுந்து உசிரை மாச்சிருக்கணும்... அப்பிடிச் செய்யாமல்... இண்டு வரையில நான் உயிரோடு போராடிக்கொண்டிருக்கின்றன் எண்டால்... எதுக்காக?... என் கண்மணி இரண்டு பேரும் கண்கலங்காமல் வளர வேண்டும் எண்டதுக்குத் தானே... இதுக்காக நான் ரத்தத்தை பிழிஞ்சு பாடுபட்டுக் கொண்டிருக்கின்றது தெரியாதா தெய்வமே...

(நடந்து வரும் காலடியோசை)

சரஸ்: (வந்து கொண்டே) சாந்தி...! சாந்தி என்ன இது உலக்கையை கையில பிடிச்சுக் கொண்டு கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறாய்...?

சாந்தி: ஆர்... சரஸ்வதியே...? வா... இப்பிடி அந்தப் பெட்டிய இழுத்துப் போட்டுட் டு இரு சரஸ்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உலக்கையால் இடிக்கும் ஓசை)

சரஸ்; ஏன் சாந்தி... கண்ணீர் விடுறாய்...?

சாந்தி: கண்ணீரா...? எங்கட இப்போதைய வாழ்க்கையே அதுதானே... எண்டைக்கு சரஸ் அவர் என்னை விட்டு போனாரோ... அண்டு தொடக்கம் கண்ணீர்தானே

(இடிக்கும் ஓசை)

சரஸ்: சாந்தி... நடந்ததை நினைச்சி நெடுக கவலைப்படுறதுல... ஒரு புண்ணியமும் இல்ல...

சாந்தி; (அழுத்துக் கொண்டு) புண்ணியமாவது... பாவமாவது... இந்த ரெண்டையும் பத்தி சிந்திக்க எனக்கு ஏது நேரம்...?

சரஸ்: சரி... சரி ஆகவும் மனம் உடஞ்சு போகாத......
(பெருமூச்சு விட்டுக் கொண்டு) சரி... இடிச்ச மாவ சுளகுல கொட்டு... நான் அரிக்கிறன்...

(மா அள்ளிப் போடும் ஓசை... அரிக்கும் ஓசை)

சரஸ்; சாந்தி... எதற்கும் ஒரு காலம் உண்டு தெரியுமா பொறுத்திரு... எங்க ... உன்ர மகனைக் காணல்ல... நீ இது வரை பட்ட பாட்டுக்கு அவனும் எஸ். எஸ். சி சோதனையைப் பாஸ் பண்ணிப் போட்டான். மனம் வச்சி படிச்சவன் இல்லையா...? இஞ்ச பெடியள் எல்லாம்... டியூசன்... டியூசன்... டியூசன் எண்டு அலஞ்சி திரிஞ்சாங்க... கடசில சோதினையில குண்டு ஆனு... உன்ர பொடியன் ஒரு டியுஸனும் இல்லாம பாஸ் பண்ணிப் போட்டானே... அத நினைக்கக்குள்ள எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? அது உனக்குப் போதா சாந்தி...

சாந்தி: ஆமாம் சரஸ்... அவன் பொடியன் ரமணி... திண்டது பாதி தின்னுதது பாதியாக பட்டினி கிடந்து விடாப்புடியாக படிச்சு பாஸ் பண்ணினது எனக்கும் சந்தோஷம்தான்... ஆனு

சரஸ்: (பிறகு என்ன) ஆனுவும் ஆவன்னுவும்...

சாந்தி: அவன் பொடியன் கஷ்றப்பட்டு பாஸ் பண்ணிப் போட்டான்தான்... ஆனு... அவன்ர அறிவையும் படிப்பையும் நம்பி இப்ப ஆர் வேலை குடுப்பினம்...? ஒண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டில் கையில காசு இருக்க வேணும் இல்லாட்டி ஆராவது பெரிய ஆக்கள்ர அணைவு வேணும்... இந்த ரெண்டு வழி யும் எங்களிட்ட இல்ல சரஸ். அதுதான்... அவன் ரமணி பாஸ் பண்ணியும்... என்ன பிரயோசனம்?

சரஸ்: அதெண்டா நீ சொன்னியே அது மெய்தான்... இப்ப எல்லாத்துக்கும் பணந்தானே முன்னுக்கு நிக்குது... எண்டாலும் சாந்தி... மரம் வச்சவன் தண்ணி ஊத்தா மலா போவான்? நம்பிக்கய மட்டும் விட்டுருத... உன்ர மகனுக்கு ஒரு நல்ல வேலை கிடைக்கத்தான் போகுது...... அவன் உன்ன வச்சு இராசாத்தி மாதிரி காப்பாத்தத்தான் போறுன்...

சாந்தி: என்னவோ... என்ர உடம்புல ஒரு சொட்டு உயிர் இருக்குமட்டும் அந்தப் பிள்ளைகளை கண்கலங்க விட மாட்டேன்.

(சைக்கிள் மணி அடிக்கும் ஓசை)

சரஸ்: சாந்தி... கதய நிப்பாட்டு... வெளில ஆரோ கூப் பிடுகிறுப்போல இருக்கு...

சாந்தி: (அலுத்த குரலில்) என்னத் தேட... ஆர் வரப் போறுங்க... வாரதெண்டா... அவன் கடிதக்காரன்தான் வருவான்... அரிதட்ட வச்சிட்டு ஒருக்கா எழும்பிப்போய் பார்...

(நடந்துசெல்லும் ஓசை) (நடந்து வரும் ஓசை)

சரஸ்: சாந்தி... உன்ர வாய்க்கு சீனி அள்ளிப்போட வேணும்... நீ சொன்னமாதிரி கடிதக்காரன்தான் கூப்பிட்ட வன்... இந்தா... உன்ர மகன்ர பேருக்கு கடிதம் ஒண்டு வந்திருக்கு...

சாந்தி: மகனுக்கா... முருகா... நீதான் துணை...

(காலோடியோசை வரும் சத்தம்)

ரமணி: (உள்ளே வந்துகொண்டு) அம்மா... இந்தாங்க... ஐந்து ரூபா...

சாந்தி: ஆர்... ரமணியா... எங்கால மகனே... உனக்குக் காசு...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமணி: இல்லம்மா... வந்து... எனக்குத் தெரிஞ்ச ஒருவர் றக்டர்ல கொண்டுவந்த கல்லைப் பறிச்சுப் போடச் சொன்னார்... சும்மா நிக்கிறனென் தானே எண்டு பறிச்சுப் போட்டன்... கூலியா ஐஞ்சுரூபா தந்தார்... அதுதான்...

சாந்தி: ஐயோ... மகனே... இவ்வளவு படிச்சுப்போட்டு கூலிவேலை செய்திட்டு வந்திருக்கிறியே...

சரஸ்: அதுக்கில்லம்மா... வந்து...

சாந்தி: சரி... சரி... போய் கையக்கால கழுவிவிட்டு வா

சரஸ்: தம்பி...இங்க கொஞ்சம் நில்... உனக்கொரு காகிதம் வந்திருக்கு... இந்தா...

ரமணி: கடிதமா... எனக்கா... அப்பிடியெண்டா...அதாத்தான் இருக்கும்.

(கடிதம் பிரிக்கும் ஓசை)

சாந்தி: மகனே... ரமணி... அதென்ன கடிதாசியிலே மூழ்கிப்போனு...? ஆரிடத்தில் இருந்து வந்த கடிதாசி...?

சரஸ்: காகிதத்த உடக்கேக்குள்ள தம்பியின்ர முகத்தில சந்தோஷம் பொங்கிச்சு... இப்ப முகம்... ஒரு மாதிரியாப் போச்சு... என்ன விஷயம் தம்பி...?

ரமணி: இல்ல... வந்து... கொழும்பில இருக்கிற கொம்பனி ஒண்டில செக்குரிட்டி வேலைக்கு இடமிருக்கு எண்டு கேள்விப்பட்டு எழுதிப் போட்டனுன்... அதுதான் பதில் வந்திருக்கு...

சரஸ்: என்னவெண்டு...

ரமணி: உடனே... வந்து வேலையைப் பொறுப்பெடுக்கட்டாம்...

சாந்தி: உண்மையாகவா...கடவுளே... இப்பதான் கண திறந்திருக்கிறார்.

ரமணி: ஆனு... அம்மா...

சாந்தி: என்னடா... ஒருமாதிரி இழுக்கிறுய்... சொல்

ரமணி: அந்த வேலைக்கு... டிப்போசிட் கட்டவேணும்... ஆயிரம் ரூபா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தி: என்ன... ஆயிரம் ரூபாயா?... அதுக்கு நாங்க எங்கபோற...?

சரஸ்: அப்பிடிச் சொல்லக்கூடாது சாந்தி... இப்பிடி வேல வந்து வாய்க்கிறது அவ்வளவு லேசில்ல கண்டியோ...? அதுவும்... கொழும்புல கிடைக்கிறதெண்டா... அதிஷ்டந் தான்... எப்பிடியாவது... மாறிச்சாறி... ஒருமாதிரியாகக் கட்டப்பாப்பம்...

ரமணி: ஓமோம் அம்மா... நல்லவேலை... சம்பளமும் தாராளமாகக் கிடைக்கும்... தங்கிறதுக்கு பிறீ ரூம் தரு வாங்க... ஓவர்ரைம் காசும் கிடைக்குமாம்... எப்பிடியெண் டாலும்...

சரஸ்: இந்தா... உன்ர மகனுக்கும் நல்ல விருப்பம்...

சாந்தி: ஓமோம்... தம்பிக்கும்... நல்ல விருப்பம்... கிடக்கு... ஆனா... அவ்வளவு பெரிய தொகைக்கு நான் எங்கால போறது... அதுதான் யோசிக்கிறன்...?

சரஸ்: எங்கட மூத்துராசாட்டையே... அவன் அறுந்த வட்டிக்காரன்... பதினைஞ்சு சத வட்டி குடுக்கவேணும்...

சரஸ்: அறு வட்டிதான்... எண்டாலும்... ஒரு மூண்டு நாலு மாசத்தில்... தம்பி – சம்பளத்தில... திருப்பிக் குடுத்திட லாம்தானே...

ரமணி: ஓம் அம்மா... மூணு நாலு மாசத்தில் தவணை தவணையாகக் குடுத்து முடிச்சிடலாம்.

சாந்தி: அப்பிடியெண்டா... சரி கேட்டுப் பார்ப்போம்... சரஸ் கெதியா மாவ அரி... இத இடிச்சிக் குடுத்துட்டு அவன்ர போய்க் கேட்டுப் பார்ப்போம்...

சரஸ்: இதெல்லமே உடனுக்குடன் செய்யவேணும் சாந்தி... இஞ்ச உலக்கைய இப்பிடிகொண்டா... இன்னும் கொஞ்ச அரிசிதானே கிடக்கு. நான் இடிக்கிறன்... நீ... போய் அவன்ர அலுவல பாத்திட்டு வா... ஓடு... ஓடு...

(காட்சி மாற்ற இசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 2

(அரிசி புடைக்கும் ஓசை)

(நடந்துவரும் காலடியோசை)

சரஸ்: 'என்ன சாந்தியக்கா என்ன செய்றீங்க...?'

சாந்தி: 'சோத்துப் பருக்கயக் கண்டு... நாலு நாளாப் போச்சு... இன்டைக்கு கூப்பன் எடுத்தனுன்... அதுதான் ராவைக்கெண்டாலும் சோறு போடலாம்... என அரிசில தெரியிறன்...!'

சரஸ்: 'அதுசரி... உன்ர பொடியனிட்ட இருந்து கடிதாசி ஏதும் வந்துதா...?'

சாந்தி: 'அதுதானே... ஒண்டும் வரல்ல... அவன் கொழும்புக்குப் போன உடன ஒரு கடதாசி போட்டான்... பிறகு... இப்ப ஆறு மாசமாப் போச்சு... ஒரு விசயமும் இல்ல... அங்க பொடியன் என்ன கஸ்ரப்படுதோ...? இங்க வட்டிக்காரன் ஒரு பக்கம்... காசுக்கு நெருக்கிருன்... மூண்டு மாசத்தில தாரன் எண்டனுன்... இப்ப ஆறு மாச மாப் போச்சு விடுவாங்களா...?'

சரஸ்: 'அதெண்டா... மெய்தான்; வாங்கின மாதிரி சொன்ன தவணைக்கு குடுத்தாத்தானே பிறகு ஏதும் அவ சர ஆவத்துக்கு வாங்கலாம்...'

சாந்தி: 'அதுதானே சரஸ்... இந்தப் பொடியளுக்கு ஒண்டும் விளங்குவதில்லையே...

சரஸ்: 'இவன் வாதக்கார வல்லிபுரத்தார்ர பொடியனை நேத்து மார்க்கட்டில கண்டனுன்...'

சாந்தி: 'எவன்...? அவன் மூத்தவனு...? அவன் கொழும்பில இல்லையா வேலை செய்யிருன்...?

சரஸ்: 'ஓம்... அவனத்தான் சொல்றன்... கொழும்பில உன்ர... மகன் ரமணியக் கண்டவனும்...'

சாந்தி: 'மெய்யாகவா...? கடவுளே... எப்பிடி சரஸ் அவன் சுகமாக இருக்கிருனுமா? பிள்ளைக்கு ஏதும் காச்சல் கீச்சலோ கொழும்புல எங்க ஆனமான சொப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கப்போகுது... நான் ஒருபக்கம்... நீ என்னவோ சொல்ல வந்தனி... அவன் பொடியன் என்ன சொன்னவன்...?'

சரஸ்: 'பட்டகாலிலேயே படும் எண்ட பழமொழியச் சொன்னவங்க... நல்ல... அனுபவத்திலதான் அதச் சொல்லியிருக்க வேணும்... சாந்தி...'

சாந்தி: 'சரஸ்...! ஏன் அப்பிடிச் சொல்லுறாய்...?'

சரஸ்: 'பின்ன... என்ன சாந்தி. நீ... அந்தப் பொடியன படிக்க வைக்கிறதுக்குப் பட்டபாடு... எனக்குத் தெரியும்... உடம்பப் போட்டு வருத்தி... நெருப்புக் குளிச்சி... அதுவும் போதாதெண்டு... அவன்ர வேலைக்கு காசு கட்ட வேணும் எண்டோன... வட்டிக்கு எடுத்துக் குடுத்து... அனுப்பினாய்... இதெல்லாம் ஏன் செய்தனீ...? பிற்காலத்தில் அந்தப் பொடியன் உன்னைக் காப்பாத்துவான்... எண்டு தானே...?

சாந்தி: 'அதெல்லாம்... உண்மைதான்... இப்ப அதெல்லாத்தையும்... ஏன் சொல்லுறாய்?

சரஸ்: பின்ன...சொல்லாமல் என்ன செய்யிறது...? உன்ர மகன் செய்திருக்கிற வேலைய... நினைச்சா...'

சாந்தி: சரஸ்... சுத்தி வளைக்காம... சொல்... அப்பிடி என்னத்தச் செய்து போட்டான்.

சரஸ்: நான் சொல்லக்கூடாது எண்டுதான் முதல்ல நினைச்சன்... ஆனா... சாந்தியக்கா அத... சொல்லாமலும் இருக்க முடியல்ல... அவன் உன்ர பொடியன்... கொழும்பில... தங்கியிருந்த வீட்டுப் பொட்டையச் சடங்கு முடிச்சிட்டானாம்...'

சாந்தி: 'என்ன...? என்ர பொடியன் சடங்கு முடிச்சிட்டானா...? என்னக் கேக்காமல் சடங்கு செய்திட்டானா...? ஐயோ... தெய்வமே...! ஏன் என்னைப்போட்டு இப்படிச் சோதிக்கிறாய்...?'

(தடால் என்று விழும் ஓசை)

சரஸ்: (பதற்ற குரலுடன்)'கடவுளே... இதென்ன சாந்தி இப்பிடி திடும் எண்டு... விழுந்திட்டாள்... இவளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓஸ்பெடெண்டா... ரஜனி செதி... ரஜனி... ரஜனி... கொஞ்சம் தண்ணீ... கொண்டோடி வா...'

## காட்சி 3

(வீதியில் பஸ் போக்குவரத்துச் செய்யும் ஓசைகள்)

கந்தையா: (தனக்குள்) 'மணி ஏழு ஆகிக் கொண்டிருக்கிறது... இன்னும் ஒரு மணித்தியாலத்தில... ஸ்ரேஸனுக்குப் போய் விடவேணும்...ம்... இன்றைக்கு 'ரெயின்ல கோணர்' சீற் கிடைக்குமோ தெரியாது...'

ராஜன்: (வந்துகொண்டே) குட் ஈவினிங்... சேர்...'

கந்தை: 'ஆர்... எங்கட ராஜனே...? எப்ப கொழும்புக்கு வந்தனீ?'

ராஜன்: 'இப்ப நான் இங்க கொழும்புலதான்... இன்சூரன்ஸ் கொம்பனில... கிளாக்காக வேலை செய்யுறன்...'

கந்தை: 'உண்மையாகவா...? மெத்த நல்லது...?

ராஜன்: 'சேர்...! அண்டைக்கு நீங்க அடிச்சி அடிச்சி படிப்பிச்சு விட்டபடியால்தான், முதலாவது கடவுள் புண்ணியத்தில்... ரெண்டாவது உங்கட புண்ணியத்தில இண்டைக்கு... ஒரு மாதிரி நல்லா இருக்கிறேன் சார்...'

கந்தை: 'அப்பிடியே... நல்லது... நல்லது... உன்னைப் போல எல்லாப் பொடியன்களும் நிலைமைய உணர்ந்து படிச்சாங்க எண்டால்... எவ்வளவு நல்லது.'

ராஜன்: 'ஓம் சேர்— அந்தக்காலத்தில... படிக்கிறபோது அடிவிழுகிற நேரமெல்லாம் எரிச்சல்... எரிச்சல் ஆக வந்தது. படிப்ப விட்டா என்ன எண்டுகூட நினைச்சனான்; ஆனா... இப்பதான் அதுட நன்மை... தெரியுது.'

கந்தை: தம்பீ... படிப்பிக்கிற மாஸ்ரர்மார் என்னத்தச் செய்தாலும்... அது உங்கட நன்மைக்குத்தான் செய்யுறவங்க... ஆனா... அது உங்களுக்கு அப்போ விளங்குகிறதில்லை

(டக்... டக்... டக்... என்ற ஓசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொண்டி: 'ஐயா...! துரைமார்களே... இந்த ஒரு கால் இல்லாத ஏழைக்கு இரங்குங்க··· சாப்பிட்டு நாலு நாளாய்ப் போச்சு... வேல வெட்டி எதுவும் செய்யமுடியாத பாவி ஐயா... நான்...'

ராஜன்: 'சும்மா... போயா...! வுடிஞ்சா பொழுது பட்டா... உங்கட தொல்லையே பெரிய தொல்லையாப் போச்சு... நாங்க படுற பாட்டுக்குள்ள...'

நொண்: 'ஐயாமாரே...! அப்பிடிச் சொல்லாதீங்க...கால் நடக்க முடியாத நொண்டிங்க ஏதாவது உதவி செய்யுங்க... உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு ஐயா...

ராஜன்: சும்மா கரச்சல் தரவேணும்... உன்ர புண்ணியமும் வேணும் ஒண்டும் வேணும்... ஆளை... விடு...'

— (டக்... டக்... ஓசை)

கந்தை: 'தம்பீ... இங்க நில் உன்னை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு... நீ... எந்த ஊர்...?'

நொண்: 'அதெல்லாம் என்னத்துக்கையா...? உங்களுக்கு... எங்கேயோ... பிறந்தன்... எப்பிடி எப்பிடியோ சீவிச்சன்... இப்ப இங்க ஒரு நேரச் சாப்பாட்டுக்கு நொண்டிக் கொண்டு அங்குமிங்கும் திரியிறன்...'

ராஜன்: ஓ...! நானும் உன்னை... எங்கேயோ பார்த்திருக்கிறன்...ம்... பொறுவாரன்... நீ... நீ... உன்ர ஊர் திருக்கோணமலை எல்லவா...?'

ராஜன்: 'ஏன் பேசாமல் நிற்கிறாய்...? அப்ப நீ... நான் நினைச்ச ஆள்தான்...... நீ... நீ... உன்ர பேர் ரமணி எல்லவா?'

கந்தை: 'எந்த ரமணி...? எங்களுக்கெல்லாம் மா இடிச்சி... அப்பம் சுட்டுத்தார சாந்தியிட... மகளோ...?'

ராஜன்: ஓம்... 'சேர்! அவன்தான்... ரமணி... ரமணி— இதென்னடா கோலம்...? என்னோட படிக்கேக்க எவ்வளவு வடிவா இருந்தனீ... இப்ப... அது சரி... எப்ப நீ கொழும்புக்கு வந்தனீ...? ...'

கந்தை: ரமணீ... உன்ர காலுக்கு என்ன நடந்தது...?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமணி: (சத்தமாக அழுது கொண்டே) 'ஐயோ... இது என்ன கொடுமை...? ஒருவர்ர கண்ணுலயும் முழிக்காம... இந்தப் பக்கம் ஒதுங்கிச் சமாளிக்கலாம் என்று நினைச்சிருந்தேனே... இப்ப நான் என்ன செய்யுறது... ஒரு பக்கம் என்னைப் படிப்பிச்ச கந்தையா மாஸ்ரர்... மறு பக்கம்... என்னோட ஒண்டாப் படிச்ச நண்பன் ராஜன்... இது என்ன சோதனை...?

கந்தை: தம்பி... தம்பி... ரமணி... அழுகிறத நிப்பாட்டு உனக்கு என்ன நடந்தது எண்டு சொல்...?'

ரமணி: 'ராஜன்... அப்ப... கொழும்புல இருந்து... ஒரு வேலைக்குக் கடிதம் வந்தது எண்டு உனக்குச் சொன்னது ஞாபகம் இருக்க...?'

ராஜன்: 'ஓ... ஆ... ஆனு... அதுக்கு என்னவோ... காசு டிப்போசிட் பண்ணவேணுமெண்டு... அதுக்கு நீ போகல்ல எண்டல்லவா... கேள்விப்பட்டன்...'

ரமணி: 'ஓ......! அப்பிடித்தான் இருந்தனான்... ஆனு... அதுக்குப் பிறகு... அம்மா எங்கேயோ காசு மாறித் தந்தவ... இங்க... கொழும்புல வெல்டிங் கொம்பனில செக்குரிட்டியா வேலை கிடைச்சுது... மட்டக்குளியில தங்கியிருந்தனான்... அந்த வீட்டுக்காரர்ர மகள் என்னை விரும்பினாள்... ஒருவருக்கும் தெரியாமல் அவளை நான் கலியாணம் முடிச்சிட்டன்...'

கந்தை: 'ஓ... கல்யாணமும் முடிச்கிட்டியே...?

ராஜன்: 'நீ கல்யாணம் முடிச்சது உங்கட அம்மாவுக்குத் தெரியாது எண்டு நினைக்கிறன்.'

ரமணி: 'ம்... அம்மா ஒருவருக்கும் நான் அறிவிக்கவில்லை...'

ராஜன்: பிறகு... என்ன நடந்தது...!'

ரமணி: போன வருஷம்... ஒருநாள்... கார் ஒன்றில் 'அக்ஸிடன்ட் பட்டு, ஆஸ்பத்திரில இருக்கேக்க... காலைக் கழட்டிப்போட்டாங்க... அதோட கொம்பனியால வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் நிப்பாட்டிட்டாங்க... சாலும் போச்சு... வேலையும் போச்சு... இந்த இரண்டும் போனதோட... அவள் என்ர மனைவியும் என்ன விட்டுட்டுப் போயிட்டாள் .. இப்ப நான் தெருத்தெருவா அலையுறன்...'

ராஜன்: 'ரமணி...! இதொண்டும் எங்களுக்குத் தெரியாதே... சரி... இப்படி ஒரு துக்க சம்பவம் நடந்திட்டுது... உடனே... நீ ஊருக்கு வரவேண்டியதுதானே...?'

ரமணி: 'எந்த முகத்தோட நான் ஊருக்கு வருவன்...? என்ர படிப்புக்காக காலமெலாம் கஷ்ரப்பட்ட அம்மாட்ட ஒரு சொல் சொல்லாம கலியாணம் கட்டினன். உழைச்ச காசில ஒரு சதம்கூட வீட்டுக்கு அனுப்பல்ல... இந்த லட்சணத்தில... நான் எந்த முகத்தோட வீட்டுக்கு வருவன்?,

கந்தை: 'ரமணி...! நீ... சொல்றதிலையும் அர்த்தம் இருக்கு... அந்த சாந்தி... உன்ர அம்மா... உன்னப் படிப்பிக்கப் பட்ட கஷ்ரம் எனக்குத் தெரியும்... அதோட உன்ன வேலையில சேர்க்கிறதுக்கு... ஆயிரம் ரூபா வட்டிக்கு வாங்கிட்டு... பிறகு அதக் குடுக்க முடியாம அந்தரிச்சுப் போனதும் எனக்குத் தெரியும் ரமணி...'

ராஜன்: 'ரமணி... நீ... ஒரு படிச்ச முட்டாள் நீ... மாத்திரமல்ல... இப்ப படிச்ச பிள்ளைகளில் அநேகம்பேர் இப்பிடித்தான்... ஒரு வேலை... கிடைச்சதும்... முதல்ல கல்யாணம்... பிறகு... தனிக்குடித்தனம்... அப்பா, அம்மாவைக் கவனிக்கிறதேயில்லை...'

கந்தை: 'சரி...சரி... பழைய கதைகளை விட்டுட்டு இப்ப விஷயத்துக்கு வருவோம்... மணி சரியாகிறது... ரெயிலுக்கு நேரமாச்சு... ரமணி புறப்படு...'

ரமணி: 'எங்கே ஐயா... கூப்பிடுறீங்க...'

கந்தை: 'வேறெங்க...? ஊருக்குத்தான்... இங்க தனியா பட்டினி கிடந்து சாகாம... வா... எங்களோட...'

ரமணி: 'ஐயா... நான் ஒரு துரோகி...! பெற்ற அம்மாவையே கவனிக்காத அயோக்கியன் - பாவி - என்னை விட கழிவு கெட்டவன் இந்த உலகத்தில் ஒருவருமில்லை... நான் ஆர்ர கண்ணிலயும் படாம... இங்க எங்கயாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுங்கி ஒரு மூலையில்... ஒரு நாளைக்கு செத்துப்போகி றேன்... தயவுசெய்து... என்ன ஊருக்கு கூப்பிடாதேங்கோ சேர்'

கந்தை: 'இல்ல ரமணி... நீ ஊருக்கு வரத்தான் வேணும்... நீ பிழை செய்தது உண்மை. செய்த பிழைகளை ஒருவன்... எப்ப உணர்ந்து மனம் வருந்துகிருனே... அப்போதே அவன் நல்ல மனிதனுக... முயற்சிக்கிருன்... நீ பாவி இல்லை. சந்தர்ப்ப சூழ்நிலை உன்னை பாவியாக்கி யிருக்கிறது... இனியாவது நல்ல சந்தர்ப்ப சூழ்நிலையை உருவாக்கவேண்டியது அவசியமாகும்... எனவே... ஊருக்கு வரத்தான் வேணும்.'

ராஜன்: 'ஓம்... ரமணி... சேர் சொல்லுவதைக்கேள்... ஒருவரையும் தெரியாத இந்த அந்நிய ஊரில என்ன செய் யப்போருய்... அங்க ஊரில உன்ர அம்மா... தங்கச்சி இருக் கிருங்கதானே... எங்கட சேரும்... உனக்கு ஏதாவது தொழில் வசதி செய்துதர முயற்சிப்பார்... கெதியா எங்க ளோட வெளிக்கிடு...'

ரமணி: 'சேர் எனக்கு உதவி செய்வார் என்றதை நான் மறுக்கவில்லை... ஆனு... அம்மா, தங்கச்சிமாரை நினைச்சா ஐயோ... படிக்கிற காலத்தில இருந்து நான் பாரமாயிருந் தேன்... என்ர உழைப்பில ஒரு பங்கும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அப்படியிருக்க... திரும்பியும் நான் அவர் களுக்குப் பாரமாய் இருக்கமுடியாது... நான் விரும்பவும் இல்லை...'

கந்தை: 'உன்ர விஷர்க் கதய விடு... சரஸ்வதி உன்ர தாய்... எல்லாவற்றுக்கும் பொறுப்பு... நீ இப்பவே புறப் படு...'

(நடக்கும் காலடி ஓசைகள்)

## காட்சி 4

(உரலில் இடிக்கும் ஓசை)

ரஜனி: (வந்துகொண்டே) 'அம்மா...! அம்மா எங்கட பள்ளில நாளை இரவுக்கு பெரிய விருந்து நடக்கப்போகுது அம்மா...

சாந்தி: விருந்தா...? (அலுத்த குரலில்) விருந்துக்கும் எங்களுக்கும் என்ன பிள்ளை சம்பந்தம்...? சாதாரண சாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுக்கே தாளம் போடும் எங்களுக்கு யாரும் விருந்து வைக்கிறதில என்ன பிரயோசனம் இருக்கு மகளே...

ரஜனி: அதெண்டா... அம்மா உண்மைதான்... இப்ப நான் சொல்ல வந்தது என்னவெண்டால்... எங்களுக்கொரு உழைப்பு வருதம்மா...

சாந்தி: எப்படி மகளே...?

ரஜனி: நாளைய விருந்திற்கு 500 இடியப்பம் வேணுமாம்... அத நான் அவிச்சுக் கொண்டாரன் எண்டு சொல்லியிருக்கன் அம்மா...

சாந்தி: ஐந்நூறு இடியப்பமா...? இடிச்ச மா ஒண்டும் கையில இல்லப்புள்ள... அரிசி வாங்கிறதுக்கும் கையில ஒரு சதமும் இல்ல... பிறகு எப்பிடி...

ரஜனி: 'அதப்பற்றி நீங்க கவலைப்படாதீங்க அம்மா... பிரின்ஸிபல்ட்ட இருந்து அட்வான்ஸ் இருபது ரூபா காசு வாங்கிக் கொண்டுவந்திருக்கிறன்.'

சாந்தி: 'என்ர மகளே... இந்தச் சின்ன வயசில... எப்பிடிப் புத்திசாலியா இருக்கிறாய்...'

குரல்: 'சாந்தி... சாந்தி...!'

சாந்தி: 'ரஜனி... வெளியில ஆரோ கூப்பிடுறாப்போல இருக்கு... ஒருவேளை .. உன்ர பிரின்ஸ்பல் வாறாரோ தெரியல்ல... போய்ப்பார்...'

(நடந்து வெளியே செல்லும் ஓசை)

(அதனைத் தொடர்ந்து பலர் வரும் காலடியோசைகள்)

சாந்தி: 'ஆரது கந்தையா மாஸ்ரரே...? இஞ்ச ரஜனி அந்தப் பெட்டிய துடச்சுக்கொண்டுவா... ஐயா வந்திருக்கிறார்...'

கந்தை: 'இப்ப நான் இருக்க வரல்ல சாந்தி... இஞ்சை எனக்குப் பிறகால... நிற்கிறது ஆரெண்டுபார்...

ரமணி: (கதறிக்கொண்டு) 'அம்மா...'

சாந்தி: 'ஆர்... ஆர்...?'

ரமணி: (கதறிக் கொண்டு) 'அம்மா... என்ர அம்மா...,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரந்தி: 'ஆர்...? என்ர மகனு..?... ஐயோ மகனே இது என்ன... கோலமடா...?'

ரமணி: 'அம்மா...! என்னைத் தொடாதீங்க... நான் பாவி பெத்த அம்மாவுக்குத்... வஞ்சகம் செய்த துரோகி...'

சாந்தி: 'ஐயா... மாஸ்ரரையா... என்ர மகனுக்கு என்ன நடந்தது...? இங்க எப்ப வந்தவன் ஐயா...?'

கந்தை: 'சாந்தி...! மனதத் திடப்படுத்திக்கொள்... கொழும்புல இருக்கக்க ரமணி உன்ர மகன்... ஒரு அக்ஸிடென்டில... அகப்பட்டுக் கொண்டான்... அங்க கொழும்பில... சாப்பாட்டுக்கு வழியில்லாம... தவித்துக் கொண்கொண்டிருக்கிறன்.'

சாந்தி: 'ஐயோ...! மகனே... நான் ஒருத்தி... அம்மா எண்டு இருக்கேக்க ஏண்டா நீ... சாப்பாட்டுக்கு தவிக்க வேணும் இந்தா பார்... இந்த உலக்கையும்... உரலும் இருக்கிறவரை... என்ர உடலில உயிர் இருக்கிறவரை உன்னை நான் காப்பாத்துவன்ரா மகனே...'

ராஜன்: 'அம்மா உண்மையிலேயே நீங்க... ஒரு பொறுமைசாலிதான்... இவன் ரமணி... உங்கட மகன்... உங்கட மகன் உழைக்கிற நேரத்தில... ஒரு சதம்கூட... உங்களுக்கு அனுப்பி உதவாதவன்... எண்டு தெரிஞ்சும்... அவனை நீங்க பாசத்தோட... ஏற்றுக்கொள்கிற உங்கட பெருந்தன்மைக்கு இந்த உலகத்தில என்னத்தா ஒப்பிடலாம்...'

கந்தை: 'அதுதான்... அன்னை... சும்மாவா... சொன்னுங்கா, அந்தக்காலத்தில இருந்தவங்க,... கொண்டுவந்தால் தந்தை... கொண்டுவந்தாலும் வராவிட்டாலும் தாய் எண்டு...'

சாந்தி: 'ரஜனி...! மகள் ரஜனி...!, இந்த ஐயாமாருக்கு சொஞ்சம்... தேத்தண்ணி போட்டுக்கொண்டா...!!

கந்தை: 'சாந்தி... வேண்டாம் சாந்தி... உன்னுடைய நிலைமைக்கு அதெல்லாம் சரிபட்டு வராது... நீ... ஏதோ வேலை செய்துகொண்டிருக்கிறய்... அதைச் செய்... நாங்க வாறம்... பிறகு நேரம் கிடைக்கிறபோது வந்து சந்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கிறன்... 'ரமணி... மனதைப்போட்டு குழப்பிக்கொள்ளாத.. உன்னுல செய்யக்கூடிய ஏதாவது தொழில் முயற்சிக்கு நான் வழி செய்வன்... வாறன்... ராஜன்... வா..' சாந்தி, ரமணி! நல்லதையா... போயிட்டு வாங்க...'

(நடந்து செல்லும் காலடியோசைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திவானும் சாவித்திரியு

(முருகப்பர் வேர்த்துக் களைத்துப் போய் வீட்டில் நுழைகிறார்)

முருகப்பர்: 'முத்தம்மா...! முத்தம்மா......! இவள் இப்பிடத்தான்... கூப்பிட்ட குரலுக்கு வரமாட்டாள்... வெய்யில்ல திரிஞ்சதில சண்ணெல்லாம் இருண்டு போய்க் கிடக்கு......எ...டீ...யே...முத்தம்மா'

முத்தம்மா: (வந்து கொண்டே) 'ஏனிப்படி தலையில அடிபட்ட நாய் மாதரி கத்திக் கொண்டு நிற்கிறீங்க...'

முருகப்: தலையில அடிபடல்ல... வெய்யில்ல அடிபட்டு வந்திருக்கன் தெரியுமா? நான் இப்ப எவ்வளவு தூரம் போயிட்டு வாரன் தெரியுமா...?

முத்தம்: 'ஓ... எங்கட பொடியன் ஜேர்மனிக்குப் போயிட்டுக் வந்திருக்கான்......நீங்க... அதவிடத் தூரமா போயிட்டு வாரீங்களாக்கும்...? அது சரி... அவ்வளவு தூரம் போயிட்டு வந்தவருக்கு... அப்பிடியே குசினி வரைக்கும் கொஞ்சம் வரமுடியாமத்தானு... இங்க நிண்டு கத்தினார்.'

முருகப்: (பெருமூச்சு விட்டுக்கொண்டு)' ம்... சும்மாவா சொன்னாங்க... காலம் கெட்டுப் போய்ச்செண்டு... வெளியில நாலு இடத்தில அலைஞ்சு வாரபனுஷனுக்கு நீ... குடுக்கிற மரியாத நல்லாத்தானிருக்கு...சரி சரி கொஞ்சம் தண்ணி கொண்டு வந்து குடுத்தா நீ குறஞ்சு போயிடுவியாக்கும்.'

முத்தம்: 'நான் ஒண்டும்... தண்ணி குடுத்தா குறஞ்சிட மாட்டன்... இஞ்சரும் தண்ணி ஒரு செம்பு கொண்டா எண்டு ஒரு குரல் கேட்டிருந்தா... வரக்குள்ளேயே கொணந்திருப்பன் அத விட்டுட்டு...'

முருகப்: 'ஓஹோ...! நீங்களெல்லாம் தண்ணி கேட்டுத்தான்......குடுக்கிறவங்களோ ? ம்... உன்னைச் செல்வி என்ன பலன்...எல்லாம் என்ர... (தலையில் அடித்துக் கொள்கிறார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தம்: இப்ப ஏனப்பா தலையில போட்டு அடிக்கிறீங்க... ஏற்கனவே அதுக்குள்ள சிலது கழண்டு கிடக்குது...'

முருகப்: 'ஓ...' சிலது கழண்ட படியாத்தான் உன்னோட இத்தனை காலமும்... சீவிக்கிறன்... அந்த நாளிலையும் மனுஷிமார்... சீவிச்சவங்கதான்... நளாயினி... தமயந்தி... சந்திரமதி... சீதை... இருந்தாங்க. இந்த தர்ம பத்தினிகள்ட கதைகளை உனக்குச் சொல்லித் தரத்தான் வேணும்... அப்பதான்... உனக்கு, ஒரு புருஷனை எப்படி நடத்த வேணும் எண்டு தெரிய வரும்... சரி சரி முதல்ல ஒரு செம்பு நிறைய தண்ணி கொண்டா'

(தலையை ஆட்டிக் கொண்டு முத்தம்மா உள்ளே போகிறாள்.)

முருகப்: (தனிமையில்) 'பழைய கதைகளைச் சொல்லிக் குடுத்து இவளை ஒருமாதிரியா சரிக்கட்டி எடுக்கவேணும்... ம்... எங்க இருந்து தொடங்கலாம்...? அரிச்சந்திரன், சந்திரமதி... நளன் தமயந்தி... சத்தியவான் சாவித்திரி... ஓம்... அதுதான்சரி... இண்டைக்கு இவளுக்கு சத்தியவான் சாவித்திரியைச் சொல்லிக் குடுப்போம்...''

(சாய்மனைக் கதிரையில் சாய்ந்து கொண்டு முத்தம்மா கொண்டு வந்து கொடுத்த செம்பை வாங்கி நீரைக் குடிக்கிறார்)

முருகப்: :'முத்தம்மா...... இப்படி இந்த கதிரையை இழுத்துப் போட்டுக்கொண்டு எனக்குப் பக்கத்தில இரு... உனக்குச் சத்தியவானைப்பற்றி ஒரு விஷயம் சொல்லப் போறன்... கேட்டுக்கோ...

முத்தம்: ''என்ன சக்திவானைப்பற்றியா...? உங்களுக்கு இப்பதான் தெரியுமாக்கும். எனக்கு நேத்துப் பின்னரமே தெரியும்... இதப் போய் இவரா பக்கத்தில இருந்து கேக்கட்டாம்... வேற வேலை இல்லாம ...''

முருகப்: ''என்ன... என்ன? நேற்று பின்னேரமா?...... (சிறிது யோசித்து விட்டு) கோயில் ஆண்டுலையும் பிரசங்கம் கிரசங்கம் எதுவும் நடக்கல்லையே... அப்பிடியெண்டா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தம்மா நேத்துப் பின்னேரம் சத்தியவானைப் பற்றி ஆர் உனக்குச் சொன்னவங்க...

முத்தம்: "அவள் வள்ளிப்பிள்ளைப் பெத்தாச்சிட பேரன் வரதன் நேத்துப் பின்னேரம் இங்க வந்தவன் இல்லையா...?"

முருகப்: "ஓ... அவன் இங்க வந்தவன்தான்... அதுக்கென்ன இப்ப...?"

முத்தம்: அவன்தான் வந்து சொல்லிவிட்டுப் போனவன்...'

முருகப்; "என்ன விசர்க்கதை பேசிறு...? இடக்கிட வலிப்பு வார வள்ளிப்பிள்ளட பேரனே உனக்குச் சொன்ஞன்...? இல்லையெண்டாலும்... அவனுக்கு ஒரு பத்து வயசு தானே இருக்கும். அவன் உனக்கு சத்தியவானைப் பற்றி சொன்ஞன் என்றிறியா'

முத்தம்; "என்ன...! வெயிலால வந்து எவ்வளவு நேரமாப் போச்சு... இன்னும் உங்களுக்கு அது மாறல்லையா... அவன் பொடியன் வரதனுக்கு பத்து வயசு என்கிறிங்க... போன பெரிய புயலுக்க பிறந்தவன் தெரியுமா? இந்தச் சித்திரையோடு அவனுக்கு சரியா பன்னிரண்டு வயசு முடியுது தெரியுமா?'

முருகப்; "அப்படியே முத்தம்மா... இப்ப பிரச்சனை... வரதனுக்கு வயசு பத்தா பன்னிரண்டா எண்டதில்லை... சரி... ஏன் வாக்குவாதம்...? அவன் வரதனுக்கு வயசு பன்னிரண்டு எண்டே வச்சுக் கொள்ளுவோம். அவன்... அந்தப் பொடியன் உனக்குச் சத்தியவானைப்பற்றி சொன்ஞன் எண்டா சொல்ருய்...?

முத்தம்: "இதென்ன திருப்பியும் கேக்கறீங்க... அந்தப் பொடியல்ல உங்களுக்கேன் சந்தேகம்? உங்களுக்கு ஆர்லதான் நம்பிக்கை...? சரி...அவனை விடுங்க... இப்ப கொஞ்ச நேரத்துக்கு முந்தி சைக்கிளில் மீன் கொண்டு தந்திட்டுப் போன மொட்டையன் பண்டாவுக்கு என்ன சொல்லப் போறியள்...?

முருகப்; "ஏன்... நீ அவனுக்கு கடன் கனக்க பாக்கி வச்சிருக்காப் போல... பென்சன் வந்தோடன... எல்லாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும் தருவன் எண்டு சொல்லு... இப்ப நீ ஆட்டுக்க மாட்டை விட்டு ஆட்டப் பார்க்கருய்... மொட்டயன் பண்டாவை இதுக்குள்ள ஏன் இழுக்கிருய்...?''

முத்தம்; ''வரதன் சின்னப் பெடியன் எண்டா... மொட்டையன் எந்தப் பெரிய ஆள்? அவனும் மீன் தரக்குள்ள சொன்னவதான்...''

முருகப்: ''என்ன சத்தியவானைப் பத்தியா...?

முத்தம்: '' ஓமென்றன்...'

முருகப்: ''ஐயோ...! முத்தம்மா எனக்குத் தலையைச் சுத்துதே...''

முத்தம்: ''எழும்பாதேங்கோ... அப்பிடியே சாய்ஞ்சு படுங்க... தேசிக்கா கொண்டு வாரன் நல்லா வெய்யில்ல சுத்திபிருக்கிறீங்க...''

முருகப், ''தேசிக்காயும் வேணும் ... ஒரு மண்ணெண்கட்டியும் வேணும்... தலையச் சுத்துறது வெயிலால இல்லடி... உன்ர கதயக் கேட்டதால வந்த வினை... பொடியன் வரதனுக்கு தெரியும்... மீன் விக்கிற மொட்டையன் பண்டாவுக்குத் தெரியும்... இப்பிடி இவங்க எல்லாருக்கும் தெரியிற அளவுக்கு... சத்தியவான்ர வரலாறு 'சீப்பா' போயிட்டா... காலம் கெட்டுத்தான் போயிட்டு... அது சரி முத்தம்மா... இவன் மொட்டையனுக்கு இந்தக் கதை எப்பிடித் தெரியும் எண்டு கேட்டியே...?''

முத்தம்: 'ஓ......' நான் கேக்காம விடுவனு...? நேத்துப பின்னேரம் அவன் கண்ணால கண்டவனும்...... தெரியுமா?'

முருகப்: 'சத்தியவானை பண்டா கண்டவனு...? அதுவும் நேத்துப் பின்னேரம்...? அட கடவுளே...! உண்மையா இது ஆண்டு எண்பத்தொன்பதுதானே...? இஞ்ச முத்தம்மா... உண்ணுண பண்டா என்ன சொன்னுன் எண்டு எனக்குக் கொஞ்சம் கெதியாச் சொல்லு......'

முத்தம்: 'நேற்றுப் பின்னேரம் அச்ஸிடன்ற் படக்கேதானும் பார்த்துக் கொண்டிருந்தவனும்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்: 'அக்ஸிடென்ட அவன் பார்த்தா என்ன பாக் காட்டி என்ன...? நமக்கென்ன? பண்டா சத்தியவானைப் பற்றி என்ன சொன்னுன் என்றதைச் சீக்கிரம் சொல்... சும்மா... கதய வளக்காம...'

முத்தம்: 'நானு கதய வளக்கிறன்...? பண்டா சொன் னதை அப்படியே சொல்லிப் போட்டன்... அக்ஸிடென்ட் பட்டத அவன் கண்ணுல பார்த்தவனும்...'

முருகப்: அடியே......! பண்டா அச்ஸிடென்ட் பட்டா அதுக்கு ஆஸ்பத்திரி இருக்கு... நீ... விஷயத்துக்கு வா"

முத்தம்: 'பிறகென்ன விஷயம் ...? திருப்பித் திருப்பிக் கேட்டுக்கொண்டிருந்தா எனக்கு விசர்தான் கிளம்பும் ...'

முருகப்: 'இனியும் புதுசா கிளம்ப அது ஒண்டுதான் இருக்கு அதையும் கிளப்பிடாத ... இப்ப நீ என்ன சொன் னனியெண்டா ... மீன் விக்கிற பண்டா அகஸிடென்ட்பட் டுட்டான் எண்டுதானே ...'

முத்தம்: 'நல்லாத்தான் வெயில்ல சுத்திருக்கிறீங்க ... நாம் என்னமோ ஒண்டச் சொன்னு ... நீங்க என்னமோ ஒண்டக் கேக்கிறீங்க ... நான் இப்ப கிளியராச் சொல்றன் கேட்டுப் புடிங்க ... நேத்துப் பின்னேரம் ... சத்திவான் ... அச்ஸிடென்ற் பட்டத பண்டா கண்ணுல கண்டவன் ... சரியா ... ? இப்ப கிளியரா விளங்குச்சா ... ?'

முருகப்: 'போதும் ... போதும்...! அந்தக் கலண்டர இப் பிடிக்குடு ... இண்டைக்கு நாள் ஏதும் பிழையா எண்டு பாப்போம்.

முருகப்: ஏன் நாள் பாக்கிறீங்க ... ...? இன்னும் நான் சொன்னது விளங்கல்ல போல ...'

முருகப்: 'விளங்கிச்சு ... விளங்கிச்சு ...... இன்னும் சொல் லாத போதும் (தலையிலே அடிக்கிறார்). இந்தக் கதய இப் படியே நிப்பாட்டுவோம் ... இல்லாட்டி பெரிய குழப்பம் வரும்'

முத்தம்: 'ஏனப்பா திரும்பியும் ஏதும் குழப்பம் வருமே ... ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்: 'இவள் வேற ... அது இல்ல முத்தம்மா ... சத்தியவானை விடுவோம் ... நமக்கு வேணும் ... இப்ப நாங்க சாவித்திரியைப் பற்றிக் கொஞ்சம் கதைப்போம் ...'.

முத்தம்: 'ஓமப்பா — பண்டா அதையும் சொன்னவன் ...'.

முருகப்: 'திரும்பியும் பண்டாவை இதுக்குள்ள கொண்டராதை ...' (சிறிது யோசித்துவிட்டு) சரி கேட்டுத்தான் பாப்போமே ... சாவித்திரியைப்பற்றி பண்டா என்ன சொன்னவன் ...?

முத்தம்: 'சத்தியவான் அக்ஸிடன்ற் பட்ட உடனே ... பெரிய அமளி துமளியாம் ... கீழ விழுந்த சாவித்திரியை முட்ட கொண்டார காக்கா தூக்கிக்கொண்டு ஓடிட்டா ணும் ...'.

முருகப்: 'பொறு ... கொஞ்சம் பொறு ...' சாவித்திரிய காக்கா காதர் தூக்கிட்டுப் போயிட்டானு ... அட கடவுளே ...! 'இது அதவிட அதிர்ச்சியாக இருக்கே ...' (வெளியில் கதவைத் தட்டும் சத்தம்).

முத்தம்: 'வெளியில ஆரோ ... கதவைத் தட்டுறுங்க ... போய்ப் பாருங்க ... எனக்கு குசினிக்குள்ள வேல கிடக்கு...' (போகிறுள்).

முருகப்: 'ஆரது...! கதவு சும்மாதான் சாத்திக் கிடக்கு ... திறந்துட்டு வாங்க...' (மணியத்தார் உள்ளே நுழைகிறுர்).

(மணியத்தார் உள்ளே வருகிறுர்).

முருகப்: 'ஆர் மணியத்தாரே ... வாங்க வாங்க...! இப்பிடி அந்தக் கதிரையில் இருங்க.

மணிய: 'எப்பிடிச் சுகமா இருக்கிறீங்களே ... ...? என்னவோ மனுஷியோ கதச்சிக்கொண்டிருந்தமாதிரி இருந்திச்சு ... நான் வந்து குழப்பிப் போட்டன்போல ...'

முருகப்: 'இல்ல மணியத்தார் ...! நீர் குழப்பல்ல ... ... நான்தான் குழம்பிக்கொண்டிருக்கிறன்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிய: 'அப்படி என்ன சீரியஸ் விஷயமோ...? எனக்குத் தெரியக்கூடாதெண்டா...? சொல்லவேண்டாம்...'.

முருகப்: 'சீ ... அப்பிடி சீரியஸ் ஒண்டுமில்ல ... நீர் வந்தது நல்லதுக்குத்தான் ... இவள் என்ர ... மனுஷி ... முத்தம்மா புதினம் ஒண்டச் சொல்கிருள் ... அதுதான் குழப்பத்திற்குக் காரணம்'...

மணிய: புதினமோ ... என்னைத்தப்பற்றி ... ...? எனக்கும் சொல்லுமன்...'

முருகப்: 'வெளில நல்ல வெயில் அடிக்குது ... எண்டாலும் நீங்க குடயோட வந்தபடியால் ... சொல்லலாமெண்டு நினைக்கிறன் ...'

மணிய: 'ஏன் குடை உங்களுக்கு வேணுமோ...?'

முருகப்: 'இல்ல மணியத்தார் ... ... கொஞ்ச நேரத்துக்கு முதல் ... நான் வெளில வெய்யில சுத்திப்போட்டு வந்தனுன் ... ... என்ர மனுஷி சொன்ன கதையைக்கேட்டு ஒரு மாதிரியா இருக்கு ... ... நீங்களும் வெயிலால வந்திருக்கிறீங்க ... உங்களுக்கும் ஒருமாதிரியா வந்திட்டா ... எண்டுதான் யோசிச்சன் ... ஆனு ... நீங்க குடையோட வந்திருக்கிறபடியால சொல்லலாம்...'.

மணிய: சொல்லுமன் முருகப்பா ...'

முருகப்: 'சத்தியவான் சாவித்திரி கதைய நம்மட மனுஷிக்குச் சொல்லத் துடங்கினன் ...'

மணிய: 'அது நல்ல கதைதான் ...! இந்த நாளிலே இதுகளுக்கு எப்பிடி ஆக்களத் தெரியப்போகுது?...'

முருகப்: 'அப்பிடி நினைச்சித்தான் மணியத்தார், கதயத் தொடங்கினன்... ஆனு... என்ர மனுஷி என்ன சொல்ருள் தெரியுமோ...'

மணிய: 'தனக்குத் தெரியும் என்ருளா...? ஓ... சிலவேளை தெரிஞ்சிருக்கலாம்தானே?

முருகப்: 'அவளுக்குத் தெரிஞ்சிருந்தாப் பரவாயில்லை... இவன் மீன் கொண்டு வாற மொட்டையின் பண்டாவுக்கும் தெரியுமாம்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிய: 'இது நல்ல புதினம்...!'

முருகப்: 'அது மாத்திரமில்ல... பண்டா நேத்து சத்திப வானைக் கண்டவனும்... அதுவும்... சத்தியவான் அசனி டென்படக்கே சாவித்திரிய காதர் தூக்கிட்டுப்போயிட்டா னும்...

மணிய: 'பொறு பொறு எனக்கு என்னமோ செய்யிது... நல்ல விசர்க்கதை...'

முருகப்: 'ஐயையோ... நீங்க குடை கொண்டு வந்தனது என்டு நினைச்சன். குடய புடிச்சிட்டு வரல்லையா...? நல்ல வெயில்...

மணிய: 'சீ...! எனக்கொண்டும் இல்ல... இதுல எங்கேயோ... என்னவோ... விஷயமிருக்கு...

முருகப்: அப்பிடியெண்டா... மனுஷிய கூப்பிடுறன்... அவளையே கேட்டுப்பாருங்'...

(உள்ளே திரும்பி)

'முத்தம்மா..! முத்தம்மா...!! இஞ்ச கொஞ்சம் வந்திட் டுப் போ...'

குரல்: 'என்ன சவத்துக்கப்பா பேந்தும் கூப்பிடுறீங்க... இங்க, குசினிக்குள்ள எனக்கு கையில வேலையாயிருக்கு... பிறகு வாறன்...

முருகப்: 'முத்தம்மா... அவசரம்... ஒருக்கா வந்துட்டுப் போ...

குரல்: 'இந்தக் கிழவனுக்கு வேலையில்லை... சும்மா அத இத கதச்சுக்கொண்டு...'

முத்தம்: (வந்துகொண்டே மணியத்தாரைப் பார்த்து) அட மணியத்தார் ஐயாவா... அப்போத கதவைத் தட்டி னது நீங்கதானு? நான் ஆரோ எண்டு நினைச்சன்...

(முருகப்பரைப் பார்த்து) 'ஏன் கூப்பிட்டனீங்க...'

முருகப்: 'முத்தம்மா... இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னால சத்தியவானைப் பத்தி சொன்னியே அத ஒருக்கா மணியத்தார்ட்ட சொல்லு...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தம்: 'என் உங்களைப் போல அவரும் ஒண்டும் தெரியாதவங்க எண்டு நினைக்கிறீங்களே... அவருக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கும்...'

மணிய: 'இல்ல முத்தம்மா... நீ அத ஒருக்காச் சொன்னியெண்டா...'

முத்தம்: 'ஐயா நேத்து எங்கட சத்தியவான் அக்ஸிடென்ற் பட்டதெல்லவா...'

மணிய: 'ஓ...! அன்ராசபுரச் சந்தியில நல்ல லோட்டோட போகேக்க ஏதோ அக்ஸிடென்ற் பட்டதெண்டு கிண்ணியால படிப்பிக்கிற டீச்சர் பொட்ட சொன்னவன். அவள் அருந்தப்பாம்...'

முருகப்: 'என்ன மணியத்தார் நீரும்...?'

முத்தம்: 'இவர் இப்பிடித்தான்... ஆரும் உண்மையைச் சொன்னு... கேட்டுக்கொள்ளமாட்டார்.

மணிய: 'நீ... சொல் முத்தம்மா...'

முததம்: 'அப்ப அக்ஸிடென்ற படக்க கிழ விழுந்த சாவித்திரியை முட்ட யாவாரி காதர் தூக்கிட்டு போயிட்டான் என்று சொல்றன... இவருக்கு விளங்குதேயில்ல... இந்தா, மணியத்தார் ஐயாவுக்கு விளங்கிட்டு... எதுக்கும் கொஞ்சம் இருக்கவேணும்... அடுப்புல கறி நான் போறன்... ஐயா... இவருககு நல்லா விளககுங்க...'

(முத்தம்மா போகிருள்)

மணிய: 'இப்பதான்... எனக்கு எல்லாம் விளங்குது?'

முருகப்: 'என்ன விளங்குது...? நான் சொன்னதா... அல்லது அவள் சொன்னதா?'

மணிய: 'நீர் சொல்வதும் சரி... உன்ர மனுஷி சொல்வதும் சரி முருகப்பா......'

முருகப்: 'அப்பிடியெண்டா... உண்மையா எனக்கு ஒரு மண்ணும் விளங்கல்ல......'

மணிய: 'நீர்... சத்தியவான் சாவித்திரியைப் பத்தி உமக்குத் தெரிஞ்சதை சொல்லப் போனீர்...?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்: 'ஓ... அதுதான் குழப்பத்திற்கே காரணம்...'

மணிய: 'உன்ர மனுஷி... சத்திவான் சாவித்திரியைப் பததி உன்னட்ட சொல்லியிருக்கா...'

முருகப்: 'ஓம்... பிறகு...... பிறகு...... நீங்களும் இப்ப குழடபுறீங்க போலிருக்கு...'

மணிய: 'நான் குழப்பல்ல...... நீர்தான் குழம்பிப் போயிருக்கிறீர்... கண்டியோ...'

முருகப்: 'அப்படீன்னு......?'

மணிய: 'கிண்ணியாவுக்கு லேன் ஓடுற வான்...... அவந்தான் சத்தியநாதன் வாங்கி விட்டிருக்கான், தெரியுந் தானே......?'

முருகப்: ஓ...... எங்கட சத்தியநாதன்ர வான்... எனக்குத தெரியும...... அதுக்கென்ன இப்ப...'

மணிய: 'அந்த வானை எல்லாரும் சுருக்கமாக...... சத்தி வான் எண்டு சொல்றவை வதானே......'

முருகப்: 'ஓமோம்...... ஓமோம்......'

மணி: 'அந்த சத்தி வான் நேத்து...... அச்ஸிடென்ற் பட்டுப் போச்சு...... அத ஆரோ இவளுக்குச் சொல்ல... அவள் உனக்குச் சொல்லியிருக்கிறாள்......'

முருகப்: (வாய் விட்டுச் சிரித்துக் கொண்டு) 'நல்ல முசுடபாத்திதான்... இப்பதான் எனக்கு கொஞ்சம் விளங்குது... நான் சத்தியவானைப் பற்றிச் சொல்ல... அவள் சத்தி வானைப் பற்றிச் சொல்ல (தலையை ஆட்டிக்கொண்டு) சரி... சரி... அப்பிடியெண்டால் இவள் சாவித்திரி இதுக்குள்ள எப்பிடி வந்தாள்...? காதர் எப்பிடி தூக்கிக் கொண்டு போனான்? அது... அது... அது...'

மணிய: 'கொஞ்சம் பொறு... உன்ர மனுஷிக்கு இங்கிலிஸ் பேச விருப்பம் இல்லையா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்: 'சரியாகக் கேட்கிறீங்க......? என்னவோ எல்லாம் கதைக்கிருள்... இங்கிலிஸ்ல...

'நேத்து நான் பேப்பர் பாத்துக் கொண்டிருக்கேக்க...' பெல் ஆச்சு... சாப்பிட வாங்கோ' என்று கூப்பிட்டாள்... எனக்கு ஒண்டும் விளங்கல்ல... 'என்னடீ... அது பெல்" என்று கேட்டதற்கு... 'அதுதான் மணி ஆச்சு சாப்பிட வாங்க' எண்டாள்...... என்னவோ தனக்குத் தெரிந்த கொஞ்ச இங்கிலிஸ் சொற்களை வைத்து...... சமாளிப்பாள்;

மணிய: 'இதுவும்... அதுதான்... வான் அக்ஸிடன்ற் படேக்க... அதுட சாவி மூண்டும் கீழே விழுந்திட்டுது... ஏதோ சாவிதானே...... பயன்படும் எண்டு முட்டக்கார காதர் தூக்கியிருக்கான்...'

முருகப்: 'எனக்கெண்டா ஒரு சாம்பலும் விளங்கல்ல..."

மணிய: 'அதான்...!... துலைஞ்ச சாவி முண்டையும் அவள்,... உன்ர மனுஷி சாவி - திரி எண்டு தனக்குத் தெரிந்த இங்கிலிஸ்ல உன்னட்ட சொல்லியிருக்காள்...'

முருகப்: 'அப்ப... நான் சொன்னது சத்தியவானும் சாவித்திரியும்...... அவள் சொன்னது... சத்திவானும... சாவிதிரியும்... அப்பிடியா... இது நல்ல வேடிக்கைதான்,| இப்ப மணியத்தார்... நீங்க மட்டும் வநதிருக்காவிட்டால்... அங்கொடைக்குத்தான் இரண்டு பேரும் போயிருப்பம்...'

மணிய: "சரி... அப்ப நான் வாறன்... நேரம் ஆகுது..."

(புறப்படுகிருர்)

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து
இலக்கியச்
சோலை
வெளியீடு
— 02 —

உள்ளே.....

1. பணத்தையல்ல...
2. கோயிலும் சுனையும்
3. மகாஜோதி
4. மூன்றில் இரண்டு
5. பட்ட காலிலே...
6. சத்திவானும்
சாவித்திரியும்

ஆசிரியரின் பிற நூல்கள்

1. நீதி சிரித்தது
— சிறுவர் தொகுப்பு
2. சந்தனக் குச்சு
— சிறுகதைத் தொகுப்பு
3. இளம் பாதன்
— சாரணிய வழிகாட்டி
4. இதயங்கள் அழுகின்றன
— நாவல்
வீரகேசரி வெளியீடு
5. ஆரம்ப ஆசிரியர்க்கான
சித்திர வழிகாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org